# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 334 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 09, செவ்வாய்க்கிழமை 25.10.2016


## உத்தரவை மீறியதற்காக துப்பாக்கியால் சுட முடியாது

### எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 25
பொலிஸ் உத்தரவை மீறியமைக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்த முடியாது என்று எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
பல்கலைக்கழக மாணவர் படுகொலை தொடர்பில் கொழும்பு ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
மோட்டார் சைக்கிள் >> 23



சக மாணவர்களின் கொலையைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஏ9 வீதியை மறித்தும் அவர்கள் ஒன்றரை மணிநேரம் அமர்ந்திருந்தார்கள்.

### பல்கலைக்கழக மாணவர் படுகொலைக்கு நீதி கோரி

# வடக்கில் இன்று முழு அடைப்பு

### சகல தரப்பினரும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக். 25
பல்கலைக்கழக மாணவர் படுகொலையைக் கண்டித்து வடக்கு மாகாணம் முழுவதிலும் இன்று முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்குச் சகல தரப்பினரும் தமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். இதனால் வடக்கு மாகாணத்தில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு செயற்பாடுகளும் நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் வடக்கு-கிழக்கு மாத்திரமல்லாமல் நாடு முழுவதிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகியிருந்தது.
படுகொலைக்கு நீதி கோரியும், இனிமேல் இவ்வாறான படுகொலைகள் நடைபெறக் கூடாது என்று வலியுறுத்தியும், அரச பயங்கரவாதத்தைக் கண்டித்தும் வடக்கு மாகாணம் முழுவதிலும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.
தமிழர்கள் ஒவ்வொருவரும் உணர்வுபூர்வமாக இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அரசியல் கட்சிகள் >> 23

### கொலைக் குற்றச்சாட்டு

## 5 பொலிஸாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25
கைது செய்யப்பட்ட இளைஞர் பின்னர் உயிரிழந்தது தொடர்பான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 5 பொலிஸாரினதும் விளக்கமறியலை கிளிநொச்சி நீதிமன்று நேற்று நீடித்தது.
குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்யலாம் என்றும் கிளிநொச்சி நீதிவான் தெரிவித்தார்.
சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி >> 06

### மாணவர் படுகொலைக்குக் கண்டனம்

# கொழும்பு உட்பட பல இடங்களிலும் போராட்டம்

## வடக்கு தெற்குப் பேதமின்றி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமையைக் கண்டித்து, வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாது இலங்கையின் பல இடங்களிலும் நேற்றுப் போராட்டங்கள் நடைபெற்றன. மாணவர்களின் சாவு தமிழர்கள் மத்தியில், பெரும் அதிர்வலையையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருந்த நிலையில், பல்வேறு இடங்களிலும் பல தரப்பினர் நேற்றுத் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் போராட்டங்களில் ஈடுபட்டனர்.
கொழும்பு உள்ளிட்ட 7 இடங்களில் மாணவர் போராட்டம் நடைபெற்றது. அதே வேளையில், சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை மூடியும் மே 17 இயக்கத்தினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. >> 21

### இளைஞர்கள் கடத்திக் கொலை

## 14 இராணுவத்தினரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25
சிறுப்பிட்டியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான்மன்று நேற்று >> 21

## உண்மை கண்டறியும் குழு யாழ். வருகிறது

### மாணவர்கள் கொலையை விசாரிக்க பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவரின் சாவு தொடர்பாக உண்மை கண்டறியும் அதிகாரி கள் குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுப்பவுள்ள >> 06

## ஜனநாயக மரபுகளை மதித்துப் போராடுங்கள்

### தமிழ் அரசுக் கட்சி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 25
மாணவர்கள் படுகொலைக்கு அமைதியான முறையில் - ஜனநாயக மரபுகளை மதித்து, முழு அடைப்புப் போராட்டத்துக்குச் சகல தரப்பினரையும் ஒத்துழைக்குமாறு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா கேட்டுக்கொண்டுள்ளார்.
இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார். வடக்கு >> 23

முச்சந்தி முரளி



அரச கணக்கு இல்
லாட்டி அப்ப ஆற்ற
கணக்கில போடுறதாம்...



## யாழ். துப்பாக்கிச்சூடு போல் தெற்கிலும் பல சம்பவங்கள்

### அரச கணக்கில் எடுக்கக்கூடாது என்கிறார் மகிந்த ராஜபக்ச

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் போன்று தெற்கிலும் அதிகம் இடம்பெறுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
சோமாவதி விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே >> 23

## ஜனாதிபதி உரிய பதில் தரும் வரை மூடப்படும் யாழ். பல்கலைக்கழகம்

### மாணவர்கள் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25
பல்கலைக்கழக மாணவர் படுகொலைக்கு நீதி கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி >> 23

## சூலக்சனுக்கு நேற்று இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணம் கொக்குவிலில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் பவுன்ராஜ் சுலக்சனின் பூதவுடல் பல்லாயிரக்கணக்கானோரின் இறுதி அஞ்சலியுடன் நேற்று மண்ணில் அடக்கம் செய்யப்பட்டது.
கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை பொலிஸாரினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட இரு பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் உடல் காந்திரோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. >> 23

### சட்டத்தரணிகள் ஆதரவு

வடக்கில் இன்று முன்னெடுக்கப்படும் முழு அடைப்புக்குச் சாவகச்சேரி நீதிமன்றச் சட்டத்தரணிகள் சங்கம் ஆதரவு வழங்கிப் பணிகளைப் புறக்கணிக்கவுள்ளதாகவும் தலைவர் த.வேலாயுதம் அறிவித்துள்ளார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் இறுதி ஊர்வலத்தின்போது.....

## எவரும் எவரையும் ஏமாற்ற முடியாது

### சம்பந்தன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக். 25

இந்த நாட்டில் எவரும் எவரையும் ஏமாற்ற முடியாது என்று நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கரடியனாறு சேவைக்காலப் பயிற்சி நிலையத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழர்கள், முஸ்லிம் மக்களை ஏமாற்றி வடக்கு - கிழக்கில் வாழ முடியாது. அதே போன்றுதான் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வடக்கு - கிழக்கில் வாழ முடியாது. தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் நாங்கள் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளைப் பெறுவதற்கு மற்றவர்களின் உரிமைகளை மதித்து அந்த மதிப்பின் அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுத்து வாழவேண்டும்.

இதற்காக என்னென்ன தியாகங்களைச் செய்ய முடியுமோ அதனைச் செய்ய வேண்டும். இதன் மூலம் எங்கள் மத்தியிலே உள்ள கசப்பான உணர்வுகளை அகற்றி மக்களை ஒற்றுமைப்படுத்திப் பிரிந்துபோன சமூகங்களை ஒற்றுமையின்பால் வழிகாட்டவேண்டியது தலைவர்களுடைய முழுமுதற் கடமை.

புதிய அரசமைப்பு உருவான பின்னர் இந்த நாட்டில் வாழ்கின்ற சமூகங்கள் அனைவரும் அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் சம உரிமையுடன் சமத்துவமாக வாழவேண்டும். அதுதான் எங்களுடைய குறிக்கோள் - என்றார். (த-5)

# ஓமந்தை அல்லது தாண்டிக்குளத்தில் பொருளாதார வலயம்

## வவுனியா ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் வலியுறுத்து

வவுனியா, ஒக்.25

பொருளாதார வலயம் மதகுவைத்த குளத்தில் அமைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், அதனை ஓமந்தை அல்லது தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர்கள் இத்னைத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை மாவட்டச் செயலகத்தில் இணைத்தலைவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் அமைய உள்ள பொருளாதார வலயம் அமைவிடம் கூட்டத்தில் எடுத்து ஆராயப்பட்டது.

“பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற மற்றும் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவெடுத்துள்ளோம். இருவாரங்களுக்குள் ஓமந்தையில் அமைப்பதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், தாண்டிக்குளம் காணியை வழங்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம். இது தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்க வேண்டும்” என்று இணைத்தலைவர்களில் ஒருவரான வன்னி மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதனையடுத்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கும் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக ஆகியோருக்கும் இடையில் கடும் கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

மதகுவைத்த குளத்தில் அமைக்க நடவடிக்கை எடுத்தபின், அதை வேறு இடத்துக்கு மாற்ற எனக்கு உடன்பாடு இல்லை. நீங்கள் எல்லோரும் எழுத்து மூலம் தந்தால் தான் அதனை ஏற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சர் ரிசாத் தெரிவித்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன் ஆகியோர் கையொப்பமிட்டு, ஓமந்தையில் பொருளாதார வலயத்தை அமைக்கவேண்டும். இரு வாரங்களுக்குள் அதற்கு உரிய பணிகள் ஓமந்தையில் தொடங்கப்படாவிட்டால், தாண்டிக்குளம் காணியை வழங்குவது என்று எழுத்து மூலம் வழங்கினர்.

“மதகுவைத்தகுளத்தில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற உள்ளதாக அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் முதலமைச்சர் தற்போது நாட்டில் இல்லாத காரணத்தால் இந்த விடயத்தை அவரிடத்தில் எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்று பதில் முதலமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார்.

(வ-21)

## நடைபாதை வியாபாரிகள் யாழ். நகருக்கு படையெடுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துள்ளனர். தெற்கே இருந்து வாகனம் மூலம் நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். நடைபாதை வியாபாரத்துக்கு என்று யாழ்.மாநகராட்சி மன்றத்தினால் இதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

நேற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நடைபாதை வியாபாரிகள் வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். அவர்களுக்கு முற்றவெளி அங்காடி வளாகத்தில் நேற்று இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் வியாபாரிகள் தற்காலிக கடைகளை அமைத்தனர். (வ-17)

## கடற்றொழில் சம்மேளனம் முழு அடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கில் இன்று செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ள முழு அடைப்புப் போராட் டத்துக்கு யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனமும் தமது ஆதரவைத் தெரிவித்திருப்பதாக அதன் செயலாளர் அன்னராசா தெரிவித்துள்ளார். யாழ். பல்கலைக் கழக மாணவர்களைச் சுட்டுக் கொலை செய்தமையைக் கண்டித்து வடக்கு மாகாணம் முழுவதும் இன்று முழு அடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 10 சமாசங்களும் 118 சங்கங்களும் இன்று செவ்வாய்க்கிழமை தொழிலில் ஈடுபடமாட்டார்கள் என அவர் தெரிவித்தார். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்கள் சுட்டுக் கொலை வழக்கில்

# சான்றுப்பொருள் நேற்று நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் யாழ்.நீதிவான் மன்றில் நேற்றுப் பாரப்படுத்தப்பட்டது. நீதிமன்றில் வைத்து குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மோட்டார் சைக்கிளைச் சுற்றிச் சுற்றிப் பார்வையிட்டு நேற்று அது தொடர்பில் அறிக்கையைப் பதிவு செய்தனர்.

கொக்குவிலில் கடந்த வியாழக்கிழமை இரவு பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பொலிஸாரே சுட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதோடு, 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களது விசாரணையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு முன் னெடுக்கிறது.

இந்நிலையில் யாழ். நீதிவான் மன்றில் நேற்று சான்றுப் பொருளான மோட்டார் சைக்கிளைப் பொலிஸார் பாரப்படுத்தினர். அது நீதிமன்றப் பாது காப்பில் உள்ளது. அங்கு வைத்தே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மோட்டார் சைக்கிளைப் பார்வையிட்டு பதிவு செய்தனர்.

நேற்று எதிரிகள் முற்படுத்தப்படவில்லை. சாட்சிகளும் முன்னிலையாகவில்லை. அதனால் அவர்களுக்கு வேறொரு தவணை வழங்கி வழக்கு முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,106)

# புலிக்கொடி ஏற்ற மறுத்தார் விக்கி

லண்டனில் புலம்பெயர் அமைப்பால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த சந்திப்பில் விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்படுவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. [illegible]க்னேஸ்வரன் மறுப்புத் தெரிவித்தார்.

முதல்வரை வரவேற்கும்முகமாக லண்டன் வாழ் தமிழர்களால் சிறப்புக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

விடுதலை புலிகளின் கொடி ஏற்றுவதே இந்தச் சந்திப்பின் முக்கிய குறிக்கோளாக இருந்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றுவதற்கான ஏற்பாடாக இது இருந்தால் இந்த சந்திப்பில் தான் உரையாற்றப் போவதில்லை என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறித்த அமைப்பினரிடம் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் மறுப்புத் தெரிவித்த பின்னர், அவர்களின் திட்டம் கைவிடப்பட்டது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் சிலோன் ருடே செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் இளைஞன் கைது

### அவர்களுக்கு வீடு வழங்கிய 3 பெண்களுக்கும் மறியல்

தென்மராட்சி, ஒக்.25

14 வயது சிறுமியுடன் குடும்பமாக இருந்த 21 வயது இளைஞனையும், இவர்களுக்கு வீடுகொடுத்து உதவிய 3 பெண்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி – நுணாவில் பகுதியில் வசித்த சிறு குடும்பம் குடும்ப அட்டை பதிவு செய்வதற்காக கிராம அலுவலரிடம் பதிவினை மேற்கொள்ளச் சென்ற வேளையில், பெண்ணின் வயது 14 எனக் கண்டறியப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக நீதிமன்ற சிறுவர் நன்னடத்தைப் பிரிவினருக்கு கிராம அலுவலர் அறிவித்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட சிறுவர் நன்னடத்தை அலுவலர், இது தொடர்பில் சாவகச்சேரி நீதிவானின் கவனத்திற்கு கொண்டு சென்றார். சாவகச்சேரி பொலிஸார் குறித்த இளைஞரைக் கைது செய்து நேற்றுமுன்தினம் நீதிவானிடம் முற்படுத்தினர். வயது வராத சிறுமியுடன் குடும்பமாக இருந்ததாக இளைஞன் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இருவரும் மச்சான் – மச்சாள் உறவு முறையினர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப் பட்டது. வழக்கினை விசாரித்த நீதிவான் இளைஞனை நவம்பர் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் அவர்களுக்கு வீட்டை வழங்கிய குற்றச்சாட்டில், மூன்று பெண்களைக் கைது செய்த பொலிஸார், மூவரையும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான் சிறுமிக்கு ஆலோசனை வழங்குவதை விடுத்து, வீடு கொடுத்தமைக்காக மூவரையும் நவம்பர் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ- 9)

# குடாநாட்டில் பல இடங்களில் அநாமதேய துண்டுப்பிரசுரம்

பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்திய சம்பவத்துக்கு உரிமை கோருவதாகத் தெரிவித்து குடாநாட்டில் பரவலாக துண்டுப் பிரசுரம் போடப்பட்டுள்ளது. முகத்தை கறுப்புத் துணியினால் மூடிக் கட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்கள் துண்டுப் பிரசுரங்களைப் போட்டுள்ளனர். அதில் ஆவாக் குழு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

துண்டுப் பிரசுரத்தில், கலாசாரத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டே ஆவாக் குழு செயற்பட்டது என்றும், பொலி ஸார் அப்பாவி மாணவர்களை சுட்டுக் கொன்றனர் எனவும், இதற்குப் பழிவாங்குவதற்காக பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துண்டுப் பிரசுரத்தில் பல தமிழ்ப் பிழைகள் காணப்படுகின்றன. இனந்தெரியாதோரினால் வீசப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரத்தினால் பரப்பான நிலைமை நிலவியது. (வ-5-33)



# மாணவர்களைச் சுட உத்தரவிட்டவர் யார்?

### கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் கோசம்

கொழும்பு, ஒக். 25

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று மாலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான சமூக ஆர்வலர்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

மாணவர்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு உத்தரவிட்டது யார்? நல்லாட்சி அரசுதான் கொலைக்குரிய பொறுப்பை ஏற்க வேண்டும் நல்லாட்சியா? கொலையாட்சியா? , நல்லிணக்கம் என்பது துப்பாக்கி வேட்டா? என்றெல்லாம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமெழுப்பினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அருட்தந்தை மா. சக்திவேல் கூறியவை வருமாறு:

நல்லாட்சி என ஒருபுறத்தில் கூறிக் கொண்டு மறுபுறத்தில் கொலைகள் அரங்கேற்றப்படுகின்றன.

அப்பாவி மாணவர்கள் இருவரின் உயிர்கள் இன்று பறி போயுள்ளன. நஷ்ட ஈடு வழங்கப்படும் என உறுதியளிக்கும் ஜனாதிபதிக்கு, மாணவர்களின் உயிரை திருப்பிக் கொடுக்க முடியுமா? அவர்களின் எதிர்காலக் கனவுகளை நனவாக்க முடியுமா? நட்டஈடு எமக்கு முக்கியமில்லை. நீதியே நிலை நாட்டப்பட வேண்டும்; நியாயம் கிடைக்க வேண்டும்–என்றார். (த)

# இலங்கை ஆசிரியர் சங்கம் முழு அடைப்புக்கு ஆதரவு

வடக்கில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குகின்றோம் - என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

"யாழ்.பல்கலைக்கழக மாணவர்களைச் சுட்டுக்கொன்ற பொலிஸாரின் நடவடிக்கையைக் கண்டித்தும், மாணவர்களின் படுகொலை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை மற்றும் நீதி கோரியும் இன்று நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தார்மீக ஆதரவை வழங்குகின்றது. பாடசாலைகளின் செயற்பாடுகளையும் நிறுத்தி கல்விச் சமூகம் ஆதரவு தெரிவிக்கவேண்டும்" - என்று ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ற-4)

# இன்று நடைபெறவிருந்த நிகழ்வுகள் சில ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவிருந்த நிகழ்வுகள் சில தவிர்க்க முடியாத காரணத்தால் வேறு நாள்களில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பண்ணாட்டுச் சிறுவர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 31ஆம் திகதி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் பி.ப. 1.30 மணிக்கு நடைபெறும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தால் நடத்தப்படவிருந்த நடமாடும் சேவை எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் என்று அதன் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கோண்டாவில் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் மக்கள் பங்குபற்றிப் பயன்பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும் என்று பாடசாலை அதிபர் அறிவித்தார். இன்று வடக் கில் முழு அடைப்பு இடம்பெறுவதால் நிகழ்வுகள் பல ஒத்திவைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ–ரி)

# சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் இன்று செவ்வாய்க்கிழமை நடத்தப்படவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சையானது பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்தார். தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்ட இந்தப் பீட்சை. எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

நேர அட்டவணை வழங்கப்பட்ட பரீட்சார்த்திகள் அன்றைய தினம் மு.ப 9.30, மு.ப 11.00 மற்றும் பி.ப 12.30 மணி ஆகிய நேரங்களில் பரீட்சைக்கு சமூகமளிக்கவேண்டும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவித்தார். (வ–106)

# வடக்கில் சில பகுதிகளுக்கு இன்று பகல்நேர மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில், மாலுசந்தி, வதிரிச்சந்தி, இரும்பு ம[illegible] ஆகிய பகுதிகளிலும் வவுனியாப் பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம், வெளிக்குளம், வவுனியா நகரம், மடுகந்த பிரதேசம், உளுக்குளத்திலிருந்து நேரியகுளம் வரை ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் நொச்சிக்குளம், முசலி, அறுகுக்குன்று, [illegible] கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். (வ–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் மேயர் சிவகீதா உட்பட நால்வர் மறியலில்

மட்டக்களப்பு, ஒக் .25

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் உட்பட 4 பேரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் மன்ற நீதிவான் எம்.கணேசராசா உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் உட்பட 3 பெண்களும், ஆண் ஒருவரும் நீதிவானிடம் நேற்று திங்கட்கிழமை முன்னிலைப்படுத் தப்பட்ட போதே, நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

திருகோணமலை -மட்டக்களப்புப் பிரதான வீதியிலுள்ள முன்னாள் மேயரின் வீட்டின் ஒரு பகுதியில் விபசாரத் தொழிலை நடத்திவந்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் மேயர், அவரது கணவர் உட்பட 9 பேர் மட்டக்களப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டனர்.

இதனை அடுத்து, இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர், முன்னாள் மேயரின் கணவர் உட்பட 5 பேர் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## முசலி பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல் -2017

2016.10.20 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் காணப்படும் அட்டவணையானது பின்வருமாறு மாற்றப்படுகின்றது.

| இல | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை வேப்பங்குளம் | 2500.00 | 40000.00 | 409750.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை பி.பி பொற்கேணி | 2500.00 | 9000.00 | 91300. 00 |
| 03 | மாட்டிறைச்சிக்கடை அகத்திமுறிப்பு | 2500.00 | 9000.00 | 91300. 00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை பண்டாரவெளி | 2500.00 | 12000.00 | 121550. 00 |
| 05 | மாட்டிறைச்சிக்கடை சிலாவத்துறை | 2500.00 | 46000.00 | 467500.00 |
| 06 | மாட்டிறைச்சிக்கடை அரிப்புத்துறை | 2500.00 | 18000.00 | 181500. 00 |
| 07 | மாட்டிறைச்சிக்கடை கொண்டச்சி | 2500.00 | 12000.00 | 121055. 00 |
| 08 | மாட்டிறைச்சிக்கடை மறிச்சுக்கட்டி | 2500.00 | 9000.00 | 91410. 00 |

முசலி பிரதேச சபை
முசலி
**25.10.2016**

திரு.எஸ். சுதாகர்
செயலாளர்
முசலி பிரதேச சபை

## ஜோர்தான் ஜோடி விபத்தில் படுகாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 53ஆவது மைல்கல் பிரதேசத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். ஜோர்தான் நாட்டு ஜோடி, இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பயணித்த வாகனத்தை இலங்கையரே செலுத்தியதாகவும் அவரும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். காயமடைந்தவர்கள், எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (த)


## பணியாள் தேவை

- ஆவரங்காலில் உள்ள ஒயில் மால்ட் விற்பனை நிலையத்துக்கு பெண் முகாமையாளர் தேவை. அருகில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
- ஐந்து வருட அனுபவமுள்ள பத்துசக்கர டிப்பர் சாரதி தேவை.

தொடர்புகளுக்கு: **துர்கா கிறேசர்**
**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**
**077 339 8775**
(ஜே.5645)
(13.18.17.21)


## நானாட்டான் பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல் - 2017

நானாட்டான் பிரதேசசபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக்கடை, மீன் கடை போன்றவற்றை 2017ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2017 – 31.12.2017) கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 25.10.2016 – 14.11.2016 பி.ப. 4.15 மணி வரை

கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 15.11.2016 பி.ப. 2.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 15.11.2016 பி.ப. 2.00 மணி

கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக்கட்டணம் ஆகியவைகளை பிரதான அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு "செயலாளர், நானாட்டான் பிரதேசசபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "……………… கேள்வி 2017 " எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியாகிய **15.11.2016** பி.ப. **2.00** மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பப் பத்திரங்கள் **15.11.2016** ஆந் திகதி பிற்பகல் **2.00** மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் உடனே நானாட்டான் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

சித்திகரமான கேள்விக்காரர் 2017 ஆம் ஆண்டிற்கு நானாட்டான் பிரதேச சபை இறைச்சிக்கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்விச் சபையால் / அரச விலைக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

நானாட்டான் பிரதேச சபையினால் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கும், கேள்விச் சபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர் கேள்வி கோர அனுமதிக்கப்பட மாட்டார்கள். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களை நானாட்டான் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த கடை வாடகை |
|---|---|---|---|---|---|
| | **நானாட்டான் உப அலுவலகம்** | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை நானாட்டான் | 1,000.00 | 35,000.00 | 385,000.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை அளவக்கை | 1,000.00 | 22,000.00 | 220,000.00 | 500.00 |
| 03 | மாட்டிறைச்சிக்கடை இலந்தமோட்டை | 1,000.00 | 15,500.00 | 155,000.00 | 500.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை நறுவிலிக்குளம் | 1,000.00 | 16,500.00 | 165,000.00 | 500.00 |
| 05 | கோழி இறைச்சிக்கடை, நானாட்டான் | 1,000.00 | 17,380.00 | 173,800.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை அளவக்கை | 1,000.00 | 7,000.00 | 70,000.00 | 500.00 |
| 07 | மீன் கடை, நானாட்டான் | 1,000.00 | 5,000.00 | 40,000.00 | 500.00 |
| | **முருங்கன் உபஅலுவலகம்** | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை, பரிகாரிகண்டல் | 1,000.00 | 26,950.00 | 269,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை, சிறுக்கண்டல் | 1,000.00 | 34,012.00 | 340,120.00 | 500.00 |
| | **வங்காலை உப அலுவலகம்** | | | | |
| 01 | மாட்டிறைச்சிக் கடை இல - 01 வங்காலை | 1,000.00 | 33,588.50 | 335,885.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை இல - 02 வங்காலை | 1,000.00 | 30,525.00 | 305,250.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக் கடை, வங்காலை | 1,000.00 | 27500.00 | 165,000.00 | 500.00 |
| 04 | வங்காலை மீன் கடை | 1000.00 | 4,400.00 | 44,000.00 | 500.00 |

நானாட்டான் பிரதேசசபை,
நானாட்டான். 25.10.2016

(C/2592467.19.20)

திரு.எஸ் லோகேஸ்வரம் செயலாளர்,
நானாட்டான் பிரதேச சபை.


## காணி விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு புத்தூர் வீதி முத்துமாரி அம்மன் கோயில் அருகில் 1 ¾ பரப்புக் காணி மலசலகூடம், கிணறு , கடைக்கட்டடம் மேல் மட்டம் வரை கட்டப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு .

**076 841 0669/076 696 4669**

## வீடு வாடகைக்கு

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அண்மையாக சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**075 620 6206**

## சாரதி தேவை

கனரக வாகன சாரதி தேவை கொழும்பு - யாழ்ப்பாணம் மற்றும் உள்ளூர் ஓடுவதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**021 492 3724**

## வீடு வாடகைக்கு, காணி தேவை

K.K.S. வீதியை அண்மித்து கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. 1½ பரப்புக் காணி யாழ். மாநகரசபை எல்லைக்குள் தேவை.

**077 333 7146**

## கரப்பந்தாட்டப் போட்டி

எதிர்வரும் 30ஆம் திகதி நொதேன் வாரியஸ் கழகத்தினால் நடத்தப்பட இருக்கும் கரப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபெற விரும்பும் அணிகள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**077 687 2865, 076 325 5229**

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கிறேன் என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும். அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன். ஆமென்

**அடியாள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முத்தரிப்புத்துறை விவகாரம்

# சிப்பாயைத் தாக்கினார்கள் என கைதானோரின் மறியல் நீடிப்பு

மன்னார், ஒக். 25

மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு கடற்படைச் சிப்பாய் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் மறியலில் வைக்கப்பட்டுள்ள 6 பேருக்கும் மன்னார் நீதிமன்று நேற்று விளக்கமறியலை நீடித்தது.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த 6 பேரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.



முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களும் கடந்த 21ஆம் திகதி சிலாபத்துறை பொலிஸார் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். குறித்த 6பேரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, 6 சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான கடற்படை சிப்பாய்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதால் அவர்கள் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை. அதையடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட 6 பேருக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் மன்றில் கூடியிருந்தனர்.

முத்தரிப்புத்துறை கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி இரவு வீடு ஒன்றுக்குள் செல்ல முற்பட்டனர் என்று தெரிவித்து சிலரைப் பொதுமக்கள் துரத்திச் சென்றபோது அவர்கள் பற்றைக்குள் ஒளிந்து கொண்டனர். அவர்களை கிராம மக்கள் பற்றைக்குள் தேடிப் பிடித்து தாக்கியுள்ளனர். அவ்வாறு தாக்கும்போதே அவர்கள் கடற்படையினர் என்பது கிராமத்தவர்களுக்குத் தெரியவந்தது. பின்னர் கடற்படையினர் அந்த இடத்தில் குவிந்து துப்பாக்கியால் சூடு நடத்தினர். எவருக்கும் காயம் ஏற்பட்டிருக்கவில்லை. பின்னர் பொலிஸார் அங்கு சென்று திருடச் சென்றனர் என்று பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்பட்ட கடற்படையினரைப் பொறுப்பெடுத்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் 10 பேர் சிப்பாயைத் தாக்கினர் என்று கடற்படையினர் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தனர். அதனடிப்படையில் கிராமத்தைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் பல நாள்களாக அங்கு திருட்டுகள் இடம்பெற்றன என்றும், எவரும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னரும் கிராமத்துக்குள் இறங்கி வீடு புகுந்து திருட முற்பட்டவரைத் துரத்திச் சென்றபோது தப்பியோடியவர் ஒரு கட்டத்தில் துரத்திச் சென்ற பொதுமக்களில் ஒருவர் மீது வாளால் வெட்டியுள்ளார். காயமடைந்தவர் 32 இழைகள் போடப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4,56)

## கட்டைக்காட்டில் சிக்கியது கசிப்பு

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி, தருமபுரம் கட்டைக்காட்டில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று தருமபுரம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்து 45 போத்தல் கசிப்பு, 365 போத்தல் கோடா என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.




தருமபுரம் பொலிஸ் நிலையத்துக்கு பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே குறித்த இடம் சுற்றிவளைக்கப்பட்டது. கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன.

இதனுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிலர் தப்பிச் சென்றுள்ளனர். தப்பித்தவர்கள் குறித்து விசாரணை நடத்தப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## மாணவனை காணவில்லை என முறைப்பாடு

அச்சுவேலி.ஒக்.25



புத்தூர் கிழக்கைச் சேர்ந்த புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் தரம் 11 இல் கற்கும் சிரஞ்சீவி மதுஷாந்தன் (வயது - 17) என்ற மாணவனை கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை முதல் காணவில்லை என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை பாடசாலைக்குச் சென்ற மாணவன் வைத்தியசாலைக்குச் சென்று ஊசி போட வேண்டும் எனக் கூறி பாடசாலையில் அனுமதி பெற்றே வெளியேறியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. காணாமற்போன மகனுக்கு எந்தவித மான பகைமையும் இல்லை. கணவர் ஆறு வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். மது சாந்தனை எல்லா இடங்களிலும் தேடிவிட்டோம். எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை என்று அவரின் தாய் தெரிவித்தார். (ற-11,109)

உ
சிவமயம்

## தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் கரவெட்டி

### கந்தபுராண படன பூர்த்தி

கந்தபுராணபடன பூர்த்தியும் உற்சவமும் நாளை (26.10.2016) புதன்கிழமை இடம் பெறத் திருவருள் பாலித்துள்ளது. அன்று 6.30 மணிக்கு காலைப் பூசையைத் தொடர்ந்து "வள்ளியம்மை திருமணப்படல படனம்" ஆரம்பமாகி மாலையில் நிறைவுறும். தொடர்ந்து பூர்த்தி உற்சவமும் நிகழும். அடியார்கள் கலந்து கொண்டு திருவருள் பெற்றுய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய நிர்வாக சபையினர்

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

### தகைமைகள்:

**கணக்காளர்(உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினி இயக்குநர்**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாளஅட்டை போட்டோப்பிரதி, சான்றிதழ்களின் போட்டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 05.11.2016 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 5516

மே/பா.உதயன்,
361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(J 5571) (14,17,18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நல்லூர் சென்பெனடிற் றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவன்
செல்வன் கணேஷ் விஷாலன்
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
**155 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்ததையிட்டு
10 ஆவது பிறந்தநாளாகிய
இந் நாளில் அவரைப் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மம்மா,
அக்கா, [illegible]
மாமா - அத்தை,
பெரியப்பா, பெரியம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்முகத்தேர்வு திகதி மாற்றம்

**“கனடாவில் உயர்கல்வி”**

பிரதேசத்தின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று (25.10.2016) நடைபெறவிருந்த கனடாவில் உயர்கல்வி தொடர்பான நேர்முகத் தேர்வுகள் நாளை (26.10.2016) புதன்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறும். (C 25999) (16,17,19)

மேலதிக விவரங்களுக்கு **071 7775666/ 021 2228060**

## அச்சகத்துறையில் நியாய விலை உயரியதரம்

எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும் வழங்காத, வழங்கமுடியாத நியாய விலை

**சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்**

**கொழும்பு பிறிண்டேர்ஸ்** கே.கே.எஸ் வீதி. 077 1974 875

## தேவை

1) மாடிக்கட்டடத்திற்கான பலகை வேலை, கம்பி வேலை செய்யக்கூடிய கூலி ஒப்பந்தகாரர்
2) தொ.நுட்ப உத்தியோகத்தர் (அனுபவம் ஆகக்குறைந்தது 3 வருடம்)
3) உப.ஒப்பந்தகாரர்கள் தேவை.

(ஜே5647)(07.19.20)

தொடர்பு - 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 2217980, 0777940170 (8.30AM TO 5.00PM)

## இலவசமாக கணித கருத்தரங்கு

மன்னார் யதீஸ் புத்தக சாலையின் ஏற்பாட்டில் மடு கல்வி வலயத்தில் நடைபெறும்.

**காலம், இடம்**

* 26.10.2016 மன்னார் அடம்பன் M.M.V
* 27.10.2016 மன்னார் வட்டக்கண்டல் G.T.M.S

நேரம் - மதியம் 1.30 தொடக்கம் இரவு 8.30 வரை

**கணித விரிவுரையாளர்**

திரு. S. நஸீர் (இலங்கையின் மும்மொழி கணித பாட உசாத்துணை நூலாசிரியர் - கொழும்பு)

G.C.E. O/L மாணவர்கள் அனைவரும் பங்கு பற்றி பயன் பெற அழைக்கின்றோம்.

(ஏ131)(07.19.20)

### உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் இந்தக் குழு யாழ்ப்பாணத் துக்கு இன்று அல்லது நாளை செல்லும் என்றும், மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பாக அந்தக் குழு கலந்துரையாடல்களை நடத்தும் என்றும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் ஆரியதாச கூரே தெரிவித்துள்ளார்.

“மாணவர்களின் சாவு தொடர்பாகக் குற் றப்புலனாய்வுப் பிரிவினரால் தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்குப் புறம்பாக, இந்த உண்மை கண்டறியும் குழுவின் விசாரணைகள் இடம்பெறும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை களை முன்னெடுத்து, அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது பொலிஸ்மா அதிபரின் பொறுப்பாகும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவைச் சேர்ந்த குழு உண்மை கண்டறியும் பய ணத்தை மாத்திரமே மேற்கொள்ளும்’ என் றும் ஆரியதாச கூரே கூறியுள்ளார். (த-5)

### 5 பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தக்க பண்டார உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளின் விளக்க மறியலே நீடிக்கப்பட்டது. இவர்களால் கைது செய்யப்பட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த சி.சுமணன் அதன் பின்னர் இரணைமடுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். சுமணனு டன் கைது செய்யப்பட்டவர்கள் அவர் இறக்கு முன் சித்திரவதை செய்யப்பட்டார் என்று நீதிமன்றில் சாட்சியமளித்திருந்தனர்.

இதையடுத்து பொலிஸாருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் கொலை வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த 5 பேர் தொடர்பான வழக்கு நேற்று மீண்டும் எடுக்கப்பட்டது. சந்தேக நபர்களை எதிர் வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சுருக்கமுறையற்ற விசாரணைகள் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. சாட்சிகளுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக அழைப்புக் கட்டளைகள் வழங்கவும் பணிக்கப்பட்டது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிவான் நீதிமன்றத்தில் பிணை பெறமுடியாது, மேல் நீதிமன்றத்தில்தான் பிணை பெறமுடியும் என்று கிளிநொச்சி நீதிமன்று சுட்டிக்காட்டியது. (உ-4,ரி3)

**SUPER BALL** சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 567
சீட்டிழுப்பு திகதி 2016.10.24 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 34 55 56 60 0
சுப்பர் ஜக்பொட் ரூ.56,888,120/=

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1308
சீட்டிழுப்பு திகதி 2016.10.24
வெற்றி இலக்கங்கள் 13 16 51 57 I
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,000,000/-

**அபிவிருத்தி இலட்சாதிபதி**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 33
சீட்டிழுப்பு திகதி 2016.10.24
வெற்றி இலக்கங்கள் 03 37 50
41
4,100,000/-
72
7615645

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் புடைவையகம் ஒன்றிற்கு உதவியாளராக தொழில் புரிவதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் தேவையாக உள்ளது.

வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 076 5578271

(17.19.20) (ஜே5650)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உடையார்கட்டுக் குளத்திலிருந்து
# நீர்ப்பாசன வசதிகளை உருவாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

முல்லைத்தீவு மாவட்ட முத்துஐயன்கட்டுநீர்ப்பாசனத்திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட உடையார்கட்டுக் குளத்தில் இருந்து வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில், மாணிக்கபுரம் ஆகிய கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. அங்குநீர்ப்பாசன வசதி இல்லாததால் சிறுபோக விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடிவதில்லை.

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதால் நாம் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். உடையார்கட்டுக்குளத்திலிருந்து மேற்படி கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதியை உருவாக்குவதன் மூலம் இந்தக் கிராமங் களைச் சேர்ந்த மக்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

உடையார்கட்டுக் குள நீர்பாசனத்தை மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில், மாணிக்கபுரம் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கவில்லை. குளத்தில் போதிய நீர் இருக்கும் போதும் கூட மேலதிக இடங்களுக்கு நீர் வழங்க முடியாது - என்று முத்துஐயன்கட்டுநீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் தெரிவித்தார். (ற-ரி7)

## பல்கலை மாணவர் கொலையைக் கண்டித்து
# முல்லை மாணவர்களும் வீதியில் இறங்கிப் போராட்டம்



முல்லைத்தீவு, ஒக். 25

யாழ். பல்கலைக் கழக மாணவர் படுகொலையைக் கண்டித்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களால் ஒரு மணி நேரக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நேற்று நடத்தப்பட்டன.

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். இதனைக் கண்டித்து பல்வேறு கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரப் பகுதி, முள்ளியவளை, புதுக்குடியிருப்பில் பாடசாலை மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். தமது பாடசாலைகள் முன்பாக சுமார் ஒரு மணிநேரம் அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். மாணவர் படுகொலையைக் கண்டித்தும், இந்தச் சம்பவத்துக்கு நீதி கோரியும் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத்தாங்கியிருந்தனர். முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களே இந்தக் கவனவீர்ப்புப் போரர்ட்டத்தை முன்னெடுத்தனர். (ற-5,ரி7,102,422)

# வனவளத் திணைக்கள நடவடிக்கையால்
# சொந்த நிலம் பறிபோகும் நிலை
## முல்லைத்தீவின் நான்கு கிராம மக்கள் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 25

வனவளத் திணைக்களத்தினர் காடுகளை அடையாளப் படுத்தும் எல்லைக் கற்களை எமது பகுதிகளுக்குள்ளும் நடுகின்றனர். அதனால் எமது சொந்தக் காணிகள் பறிபோகின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு, தேராவில், மூங்கிலாறு, இளங்கோபுரம் கிராம மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

1975ஆம் ஆண்டு காலப் பகுதியில் தொண்டமானால் எங்களுக்கு இந்தக் காணிகள் வழங்கப்பட்டன. அதற்குரிய ஆவணங்கள் போரால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளில் தவறியுள்ளன. ஆவணங்களை வைத்திருக்கும் சிலர் அதனை காட்டுக்கின்ற போதும் அதனை ஏற்க வனவளத் திணைக்களத்தினர் மறுகின்றனர். வனவளத் திணைக்களத்தினர் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடங்கள் என எல்லைக்கற்கள் நடுகின்றனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கல் இட்டு அடையாளப்படுத்துவதை நிறுத்தும்படி கேட்கப்பட்டது.

அதற்கு பின்னரும் வனவளத் திணைக்களத்தினர் சிமெந்திட்டு பலமான முறையில் காடுகளை எல்லைப்படுத்தும் கற்களை நடுகின்றனர். எங்கள் விவசாய நிலங்கள் மற்றும் வாழ்விடங்கள் பறிபோகும் அபாயம் உள்ளது- என்றனர்.

மக்களுக்குரிய, பிரச்சினைக்குரிய இடங்களில் கல் போடுவதைத்தான் நிறுத்தச் சொன்னார்கள். தற்போது போடப்படும் இடமானது 1931 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அடையாளப்படுத்தப்பட தேராவில் - ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியான 99 ஆயிரம் ஹெக்ரேயர் பகுதி. அந்த இடங்களிலேயே அடையாளக் கற்கள் போடப்படுகின்றன - என்று முல்லைத்தீவு மாவட்ட வனவளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-4,ரி7)

# போதையில் சாரத்தியம்; 13,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.25

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 13 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி பூநகரியில் காப்புறுதிப் பத்திரம், சாரத்திய அனுமதிப்பத்திரம் இன்றி போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

அவரைப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது தண்டம் விதிக்கப்பட்டது. (ற-4)



# மாணவர் கொலைக்கு நீதி கோரி பேராதனை மாணவர் போராட்டம்

கண்டி, ஒக். 25

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று பெரும் எடுப்பிலான கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். சுமார் ஆயிரம் மாணவர்கள் திரண்டு, இனவாதத்தைத் தூண்டும் அரசின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோசம் எழுப்பினர்.

கண்டி- கொழும்பு பிரதான வீதியில் கலகா சந்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. இனவாதத்தைத் தூண்டி ஆட்சியதிகாரத்தைத் தக்க வைக்க முயற்சிக்கப்படுகின்றது என்று அவர்கள் குற்றச்சாட்டினர். (ற-5)

# பொலித்தீன் கழிவு ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வு நேற்று

தேசிய பொலித்தீன், பிளாஸ்ரிக், இலத்திரனியல் மின்சாதனக் கழிவு ஒழிப்பு வாரம் யாழ். மாவட்ட தொடக்க நிகழ்ச்சி நேற்று திங்கட்கிழமை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் ஆரம்பிக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஒக்ரோபர் 24 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை தேசிய பொலித்தீன், பிளாஸ்ரிக், இலத்திரனியல் மின்சாதனக் கழிவு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் உயிர்மச் சிதைவுக்கு உட்படாமல் சூழலில் நிரந்தரமாகவே தங்கிவிடுவதால் சுற்றாடல் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அவற்றை எரிக்கும்போது வெளியேறும் [illegible] சின் நச்சுவாயு அதனைச் சுவாசிப்பவர்களிடையே பல்வேறு வகையான நோய்களுக்குக் காரணமாக அமைகின்றது. பழுதடைந்த இலத்திரனியல் உபகரணங்களைக் கழிவுகளாகத் தூக்கி வீசும்போது அவற்றில் உள்ள ஈயம், கட்மியம், குறோமியம் போன்ற பாரஉலோகங்கள் நிலத்தடி நீருடன் கலந்து உடல் நலக் கேடுகளை விளைவிக்கின்றன. [illegible] இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் இக்காலப் பகுதியில் கழிவுகளைச் சேகரித்து மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் நோக்கிலுமே மத்திய சுற்றாடல் அமைச்சால் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் இந்தக் கழிவுகளை எதிர்வரும் 30ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேமிப்பு நிலையத்திலும், அனைத்து உள்ளூராட்சிமன்றங்களிலும் கையளிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர் எம்.ஏ.சி.நஜீப், உதவிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார், யாழ்மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பிரதியமைச்சர் சரத் குமார நேற்றுக் கைது

கொழும்பு, ஒக். 25
முன்னாள் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன கைதுசெய்யப்பட்டுள்ளார். நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை சட்டத்தரணி ஊடாக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு நீர்கொழும்பில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்துகொண்டிருந்தவர்கள் மீது விபத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிரிழந்ததாக சரத்குமார குணரத்ன மீது குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 22 ஆம்திகதிவெளிநாட்டுச்சுற்றுப்பயணம்மேற்கொண்டு நாடு திரும்பியிருந்த முன்னாள் மீன் பிடித்துறை பிரதியமைச்சர் சரத் குமார குணரத்னவுக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த நிலையில் நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (தி)

# பாதுகாப்பு விடயத்தை கவனிக்க உயர் பதவி

## உருவாக்குவதில் ஜனாதிபதி கவனம்

கொழும்பு, ஒக். 25
பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மட்டப் பதவி ஒன்றை உருவாக்குவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

பாதுகாப்பு மற்றும் இராணுவத் தரப்புகள் மீது அண்மையில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளினால் ஏற்பட்டுள்ள கரிசனைகளை அடுத்தே, இந்தப் புதிய பதவியை உருவாக்குவது குறித்து ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்கள், கொலைகள் தொடர்பாகப் படையினர் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இதுபோன்ற விவ காரங்களைக் கையாள்வதற்காக, நம்பிக்கையான ஒருவரைப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஐ.தே.கவில் போட்டியிட்ட முக்கிய அமைச்சர் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின்படி, பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியாலேயே கையாளப்பட வேண்டும்.

போர்க்குற்றங்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே ஐ.நாவுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய பொறுப்பில் இருக்கிறார்.

இந்த நிலையில் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் நெருக்கமானதும் காத்திரமானதுமான தொடர்புகளை வைத்திருக்கும் நோக்கி லேயே இந்தப் புதிய பதவி உருவாக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியால், இந்த விவகாரத்தில் நேரடியாக ஈடுபடுவது நடைமுறைச்சாத்தியமற்றதாகும். அவருக்குப் பல்வேறு பணிச் சுமைகள் இருப்பதால், பாதுகாப்புப் படைகளை நெருக்கமாக ஒருங்கிணைப்பதற்கு அவருக்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

அத்துடன், கடந்தகால அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் இந்தப் புதிய பதவி உருவாக்கப்படவுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலத்தில், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அதிகாரபூர்வமற்ற பாதுகாப்பு அமைச்சராக விளங்கினார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான லலித் அத்துலத் முதலியும், பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்னவும், பாதுகாப்பு விவகாரங்களைக் கையாண்டிருந்தனர்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தையும், மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கோத்தாபய ராஜபக்சவும், பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர்.

தற்போதைய அரசில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக உள்ள ருவான் விஜேவர்த்தன ஜனாதிபதி எதிர்பார்த்தளவுக்குப் போதிய செயற்திறன் வாய்ந்தவராக இல்லாதிருப்பதாலேயே புதிய பதவியை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (தி)



## நானுஓயாவில் பஸ் தீக்கிரை

நுவரெலியா, ஒக். 25
நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா எடின்புரோ பகுதியில் தனியார் பஸ் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அந்த இடத்தில் பஸ் நிறுத்தி வைக்கப்படுவது வழமை. இனந்தெரியாதவர்களால் அவ்வாறு தீ வைக்கப்பட்டி ருக்கலாம் என்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (கு-4-43)



# மரண அறிவித்தல்

## சோதிலிங்கம் தங்கவேலாயுதம் (தங்கண்ணா)

(முன்னாள் வல்வை நகரசபை ஊழியர்)

**பிறப்பு**
**08.01.1944**

**இறப்பு**
**23.10.2016**



வல்வெட்டித்துறை, நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் தங்கவேலாயுதம் (தங்கண்ணா) கடந்த 23.10.2016 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மாயவன் - விஜயலட்சுமி தம்பதிகளின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயகுமார், ராஜ்குமார், நித்தியகுமார், காலஞ்சென்ற கஜன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தி, சந்திரகலா, சர்மிளா, தேவகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ், ரம்யா, வித்யா, லோகேஸ், ரஜி, சஜீவ், அஜய், லக்ஷன், சச்சின், தனுஜா, மீரா ஆகியோரின் பாசமிகு பேரனும் சந்திரகாந்தி, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரரும் சுசிலாதேவி, வசந்தாதேவி, குமரேஸ்வரராஜா, லக்ஷ்மிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/25997)
(14.17.18.21)

தகவல்
**குடும்பத்தினர்.**

ஜெயம் : 0044 754 5 70 4929
ராசி : 0044 782 477 1072
சுதா : 0044 773 800 7993
செல்வம்: 0044 772 765 6772


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பல்கலைக்கழக மாணவர் கொலையை கண்டித்து

# இலங்கைத் தூதரகம் சென்னையில் முற்றுகை

சென்னை, ஒக். 25

யாழ். பல்கலைக்கழக மாணவர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையிலுள்ள இலங்கைத்துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு மே 17 இயக்கத்தினர் நேற்றுப் போராட்டம் நடத்தினர். அதில் தமிழர் விடியல் கட்சியின் தோழர்களும் கலந்துகொண்டனர்.

இனப்படுகொலைக் குற்றத்திற்கு இலங்கை அரசு தன்னைத் தானே விசாரித்துக்கொள்ளும் என்று உள்நாட்டு விசாரணையை முன்வைத்த பன்னாட்டு சமூகமும், ஐ.நா. மன்றமும் தான் இந்த கொலைகளுக்கு பொறுப்பேற்கவேண்டும், இலங்கையின் குற்றங்களுக்குத் தீர்வாக வைக்கப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் என்பது தோற்றுப்போன ஒன்று என்பதே தற்போது நிரூபணமாகியிருக்கிறது என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் குற்றஞ்சாட்டினர்.




இலங்கை அரசை ஜனநாயக அரசு என்றும், நட்பு நாடு என்றும் கூறி இராணுவ ஒப்பந்தங்களையும், வர்த்தக ஒப்பந்தங்களையும் செய்யும் இந்திய அரசின் துரோகம் அம்பலமாகியிருக்கிறது, இலங்கை அரசு இனப்படுகொலை அரசு. அது தமிழர்களுக்கு அரசியல் தீர்வை ஒருபோதும் வழங்காது. உள்நாட்டு விசாரணை என்பது இலங்கையில் சாத்தியமில்லை என்பது பல்வேறு கட்டங்களில் உறுதியாகியிருக்கிறது, தமிழீழத் தனி அரசு மட்டுமே தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் என்பதே 2009 ஆம் ஆண்டுக்கு பின்பும் தெளிவாகியிருக்கிறது. தொடரும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த தமிழீழத்தைப் பிரித்துக் கொடுப்பது பன்னாட்டுச் சமூகத்தின் கடமை என்றும் வலியுறுத்தப்பட்டது.

1948 ஆம் ஆண்டு முதல் தற்போது இரு மாணவர்களின் கொலை வரை தொடரும் சிங்கள இனவாத அரசின் இனப்படுகொலைக்கு பன்னாட்டு விசாரணை நடத்தப்படவேண்டும். கட்டற்ற எதேச்சதிகாரமுடைய சிங்கள இராணுவ மற்றும் பொலிஸார் உடனடியாக தமிழர் தாயகப் பகுதியிலிருந்து வெளியேற்றப் பட வேண்டும், தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் தமிழர்களின் உயிர் மற்றும் வாழ்வுரிமைகளைப் பாதுகாக்க பன்னாட்டுச் சமூகம் மற்றும் ஐ.நா. மன்றம் பொறுப்பேற்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் போராட்டத்தின் போது முன்வைக்கப்பட்டன. (ற-5)

## கடந்தகாலத்தை நினைவுபடுத்தும் செயல்களை ஏற்க முடியாது

### யாழ். பல்கலை விஞ்ஞான ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 25

நீண்டகால போர் சூழலால் பாதிக்கப்பட்டு மீண்டு வருகையில் கடந்த காலத்தை நினைவுபடுத்தி நிற்கும் பொலிஸாரின் செயற்பாடு எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாதது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய பொலிஸார் அப்பாவி மாணவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச்சூடு எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது.

விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு துரிதமாகத் தண்டனை வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். மீண்டும் இத்தகைய துயரச்சம்பவங்கள் இடம்பெறாமலிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்,

தவறுகளையும் குற்றங்களையும் மூடிமறைக்க முற்படாது அவற்றை ஏற்றுக்கொண்டு குற்றமிழைத்தவர்களுக்கான தண்டனை, நீதி விசாரணையின் அடிப்படையில் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்தின் காரணமாக பொதுமக்களைக் காக்கும் தமது கடமையில் எந்தவித பின்னடைவும் ஏற்பட பொலிஸார் இடமளிக்கக்கூடாது. சமூக விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் தமது கடமையை பொலிஸார் தொடர்ந்தும் பொறுப்புடன் ஆற்றவேண்டும்.- என்றுள்ளது. (ற-ரி)



யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்றுக் முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சட்டப் பிரதிநிதிகளது முழுமையான பங்குபற்றுதலோடு பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதிப்படுத்த வேண்டும், கொலையை விபத்தாகக் காட்ட முனைந்தமைக்கான பொலிஸாரின் சட்டத்திற்கு முரணான முயற்சியை தேசிய பொலிஸ் ஆணைக்குழு முழுமையாக விசாரிக்க வேண்டும், மனித உரிமை ஆணைக்குழு உள்ளூர், பன்னாட்டு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் வழக்கின் நீதி விசாரணையை முழுமையாக அவதானிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை மாணவர்கள் வலியுறுத்தினர். (ற-5)

## சட்டவிரோத மணல் ஏற்றிய டிராக்டர் சிக்கியது; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 25



முல்லைத்தீவில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் டிராக்டர் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்விளான் பகுதியிலேயே நேற்று முன்தினம் டிராக்டர் கைப்பற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் க.ஜெசிந்தன் தலைமையிலான அணி டிராக்டரைக் கைப்பற்றியது. (ற-4,ரி7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்கள் திரண்டு நேற்று கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஒக். 25
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து, கிளிநொச்சி நகரில் கண்டனப் பேரணி நேற்று நடத்தப்பட்டது.



கறுப்புக் கொடி ஏந்தியவாறு கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல்வாதிகள் பேரணியில் கலந்து கொண்டனர். கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் ஆரம்பமான கண்டனப் பேரணி, மாவட்டச் செயலகத்தில் முடிவடைந்தது. கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

முற்பகல் 10 மணிக்கு, கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் தரப்பினர் ஒன்று கூடினர். அங்கிருந்து ஏ-9 வீதி ஊடாக பேரணியாகப் புறப்பட்டனர்.



பொலிஸ் அராஜகம் ஒழிக, கொல்லப்பட்ட மாணவருக்கு நீதி வேண்டும், அரச பயங்கரவாதத்தை நிறுத்து என்பவை உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர். கோசங்களையும் எழுப்பினர். சுமார் 500 பேர் வரை யில் பேரணியில் பங்குபற்றினர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.சத்தியசீலனிடம் மனு கையளிக்கப்பட்டது.
(ற-5,ரி3,34,35)

## ஆயுத அடக்குமுறை அச்சம் ஏற்பட்டுள்ளது

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளையினர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் இழப்பு எம்மிடையே மிகுந்த கவலையையும், மீண்டும் ஆயுத அடக்குமுறை அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளை தெரிவித்தது.

மறைந்து போகும் ஆயுத கலாசாரம் மீண்டும் உருவாக இடமளிக்காமல் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும். விசாரணைகளில் நீதி நிலைநாட்டப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். விபத்துகள், கொலைகள், தற்கொலைகள் என்பவற்றால் தமிழ் சமூகம் சமீப காலமாக பல இளம்உயிர்களைஇழந்து வருகிறது. இரு சகோதரர்களினதும் குடும்பங்களுக்கும் எங்கள் இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்-என்றுதெரிவிக்கப்பட்டது. (ற-4,ரி7)

## மாணவர் மீதான துப்பாக்கிச் சூடு பொறுப்புணர்ச்சி அற்ற செயல்

### துரைரெட்ணசிங்கம் எம்.பி. கண்டனம்

மூதூர், ஒக். 25
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுபொறுப்புணர்ச்சியற்ற காட்டு மிராண்டித்தனமான செயல்.

இவ்வாறுதிருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மனதில் இருந்து போர் வடுக்கள் அகற்றப்பட வேண்டிய நிலையில் பொறுப்புள்ளவர்களின் இவ்வாறான செயல்கள் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இந்தச் செயலானது வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் குழப்பமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேசமும் இதை அருவருக்கமாகப்பார்க்கின்றது. ஜனாதிபதி பாரபட்சம் அற்ற விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதுமக்களுக்கு ஆறுதலைத் தந்தாலும் இவ்வாறான செயற்பாடுகள் இனி ஒரு போதும் நிகழாமல் இருப்பதற்குரிய தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் -என்றுள்ளது. (ற-4)

## தமிழ் உயிர்கள் மீதான அலட்சியத்தை மாணவர் கொலை வெளிக்காட்டுகிறது

### யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 25
சட்டத்தின் காவலர்கள் என கூறிக் கொள்பவர்களே இந்தக் கொடூரக் கொலைகளைப் புரிந்துள்ளனர். அது மட்டுமல்லாது சம்பவம்வெளிப்படையாக தெரிந்திருந்த போதிலும் அதனை மூடிமறைத்து விபத்தால் ஏற்பட்ட மரணம் என சம்பவங்களை சோடிக்க முற்பட்டமை மிகப் பாரதூரமான குற்றச்செயல். பொலிஸாரின் இந்தச் செயற்பாடு அவர்களால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவிருக்கும் விசாரணை மீதான நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது-
கடந்த வெள்ளிக்கிழமை இரவுகொக்குவில் இரண்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் மூலம் கொல்லப்பட்டமையானது எமக்கு பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் வேதனையும் தருகின்றது. நல்லாட்சி அரசு என்கின்ற பெயரில் ஆட்சி நடத்தி வரும் அரசும் அரச நிர்வாகமும் தமிழ் மக்கள் மற்றும் அவர்கள் உயிர்கள் மீது கொண்டுள்ள அக்கறையின்மையையும் அலட்சியத்தன்மையையும் இந்தச் சம்பவம் சுட்டிக் காட்டுகின்றது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துவதோடு மாணவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினரதும் நண்பர்களினதும் துயரங்களை பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் பகிர்ந்து கொள்கிறது.

பல்கலைக்கழக சமூகம் என்கின்ற வகையில் ஊழியர் சங்கத்தினராகிய நாங்கள் பல்கலைக்கழக மாணவர் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்பவற்றோடு இணைந்து துரிதமான சுயாதீனமான பக்கச் சார்பற்ற நியாயமான விசாரணைகளின் மூலம் உண்மைகள் வெளிக் கொணரப்பட்டு குற்றவாளிகள் தண்டனைக் குட்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக இனிவரும் காலங்களில் பல்கலைக் கழக மாணவர்களது பாதுகாப்பு, எதிர்காலம் என்பன உறுதிப்டுத்தப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் -என்றுள்ளது. (ற-4)

## ஐந்து விருது

யாழ்ப்பாணம், ஒக். 25
வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளது.

இந்த வருடத்துக்கான கலாசார விழா அரச ஊழியர்களுக்கு இடையே நடத்தப்பட்டது. அதில்சண்டிலிப்பாய்பிரதேசசெயலகஅலுவலர்கள் பங்கேற்ற குறுநாடக ஆக்கப் போட்டியில் ஒரு நதி அழுகின்கிறது" என்ற நாடகமே 5 விருதுகளைப் பெற்றுள்ளது.

குறுநாடகத்தில் செபமாலைநாதன் றொபின்சன், திருமதி நிமலன் மணிமொழியின் குரல் இசையிலும் ஆசிரியை கிருபாமேரியின் ஓகன் இசையிலும், வாழ்வின் எழுச்சி அலுவலர் சுவேந்திரராசா காசிராசா மற்றும் அபிவிருத்தி அலுவலர்களான யாழினி யோகேஸ்வரன், செபஸ்தியாம்பிள்ளை ஜாம்சன் வெனி, கனகரட்ணம் ஓங்காரரூபன், கலாசார அலு வலர் திருமதி செல்வக்குமார் தாட்சாயினி ஆகியோர் நாடகக் கலைஞர்களாகப் பங்கேற்றிருந்தனர். (ற-50)

# கிளர்ந்தது கிழக்கு

## பல்கலை மாணவர் படுகொலைக்கு எதிராக



மட்டக்களப்பு, ஒக். 25
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டால் கொல்லப்பட்டதைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

வேலியே பயிரை மேய்வதா என்று கோசம் எழுப்பியவாறு தமிழ் – முஸ்லிம் – சிங்கள மாணவர்கள் கூட்டாக இணைந்து மாணவர்களின் படுகொலைக்கு நீதி கோரினர்.

கல்லடியில் உள்ள கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்கள் முற்பகல் 10 மணிக்கு பல்கலைக் கழக வளாகத்தின் முன்பாக ஒன்று திரண்டனர். கறுப்புத் துணிகளைக் கட்டியவாறு கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'கொலை செய்து விட்டு நட்டஈடு கொடுப்பதா நீதி', 'வேலியே பயிரை மேய்வதா', 'பொலிஸ் காடைத்தனத்தை நிறுத்து' என்று பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். அத்துடன் கோசங்களையும் எழுப்பினர். மாணவர்களின் போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் வரையில் நீடித்தது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மாணவர் கொலைக்கு நீதி வேண்டி

# யாழ். பல்கலை. மாணவர் திரண்டதால் முடங்கியது யாழ். மாவட்டச் செயலகம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலைக்கு நீதி கோரி ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் அணி திரண்டு யாழ். மாவட்டச் செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் ஏ-9 வீதியை மறித்து போக்குவரத்தைத் தடை செய்தும் போராட்டம் நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக மாவட்டச் செயலகத்தின் நடவடிக்கைகள் இரண்டு மணி நேரம் தடைப்பட்டன. ஊழியர்கள் பலர் உள்ளே செல்ல முடியாமல் வெளியே நிற்க வேண்டியதாயிற்று. ஏ-9 வீதி மறிக்கப்பட்டாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படவில்லை. பொலிஸார் சம்பவ இடத்தில் இல்லாதபோதும் எதுவித குழப்பமும் இடம் பெறவில்லை.

முன்னதாக, காலை 8.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பஸ்களில் ஏற்றி வரப்பட்ட மாணவர்கள், மாவட்டச் செயலகம் முன்பாக இறக்கப்பட்டனர்.

செயலகத்தின் இரண்டு பிரதான வாயில்களையும் அடைத்து, அதன் முன்பாக, வீதியோரமாக தரையில் அமர்ந்து அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். மாவட்டச் செயலகத்தின் முன்பாகவுள்ள ஆளுநர் அலுவலகத்தின் வாயிலும் அடைக்கப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டம் காரணமாக மாவட்டச் செயலகத்தினுள் அலுவலர்கள் செல்ல முடியவில்லை. மாவட்டச்செயலகத்தின் முன்பாகவுள்ள மாவட்டச் செயலரின் உத்தியோகபூர்வ வீட்டு வளாகத்தில் நின்றிருந்தனர்.

'வேலியே பயிரை மேய்வதா?', 'ஏற்கனவே காவு கொண்ட உயிர்கள் போதாதா ?', 'தமிழ் அரசியல் தலைமைகளே தமிழர்களுக்காக குரல் கொடுப்பது எப்போது?', 'தேசிய பாதுகாப்பு மாணவர்களுக்கு இல்லையா ?', 'எமது பல்கலைக்கழகத்தை மட்டும் குறி வைப்பது ஏன் ?', யாழ். பல்கலைக் கழகத்தின் அடையாளத்தை அழிக்காதே', 'அரசியல் தலைமைகளே அமைதியாக இருந்து சாதிக்கப்போவது என்ன?', 'காவல்துறையினரே அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்யாதீர்கள்?', 'காவல்துறையினர் ஐவரின் கைது வேட்டை நாடகமா ?', 'தமிழர்களுக்கு இது விதியா? சதியா ?', 'காவல்துறையின் காட்டு மிராண்டித் தனத்தை நிறுத்து', 'பொலிஸாரின் அடக்கு முறையை நிறுத்து', 'நல்லாட்சி மாணவர்களுக்கு இல்லையா?', 'தெருநாய்கள் சுதந்திரமாய் செல்லும் வீதியில் நண்பர்கள் செல்லத்தான் மரண தண்டனையா?' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

காலை 10 மணி வரையில் மாவட்டச் செயலகத்தின் வாசலை அடைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது. பின்னர் ஏ-9 வீதியை அடைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது. மாவட்டச் செயலகத்தின் முன்பாக, ஏ-9 வீதியை மறித்து அமர்ந்து கொண்டனர். யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் 11 மணியளவில் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து மாணவர்களிடம் மனுவைப் பெற்றுக்கொண்டார். சிறிது நேரத்தில் போராட்டம் முடிவுக்கு வந்தது. (ந-5,ரி1)











## வைத்தியசாலைப் பணியாளருக்கு சிங்கப்பூர் மருத்துவக் குழு பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 25

போரால் அவயவங்களை இழந்தவர்கள் மீள்வாழ்வுக்கு வருவதற்கான சிகிச்சைகள், பயிற்சி முறைகளை வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ள சிங்கப்பூர் சுகாதார குழு நேற்று வழங்கியது.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சிங்கப்பூர் லீ பௌண்டேசன் – சிங்கப்பூர் சுகாதாரக் குழுவுடன் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்களும் இணைந்து மேற்கொள்ளும் இரு நாள் என்புமுறிவு சத்திர சிகிச்சை மற்றும் பயிற்சி நெறிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் முற்பகல் 9 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அவை நடைபெறும். சிங்கப்பூர் லீ பௌண்டேசன் போதனா வைத்திய சாலைக்கு மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு மருத்துவ மாணவர்களுக்கான விடுதி மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சிங்கப்பூர் சுகாதாரக் குழுவினர் இங்கு வந்துள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பிற வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் இரண்டு நாள்கள் நடைபெறுகின்றன. நோயாளிகளுக்கான சிகிச்சை, சத்திர சிகிச்சை, எலும்பு முறிவு சார்ந்த சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக சிங்கபூர் சுகாதாரத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள், தாதியர்கள், பேராசிரியர்கள் என 14 பேர் அடங்கிய குழு பயிற்சிகளையும், பயிற்சி வகுப்புகளையும் நடத்து கின்றது. இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து வரும் காலங்களிலும் வருடத்துக்கு இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

போராலும் பிற காரணங்களாலும் அவயவங்களை இழந்தவர்கள் மீள் வாழ்வுக்கு வருவதற்குத் தேவையான பயிற்சிகள் மிக முக்கியமானது. இந்தக் குழுவினர் அதற்கான பயிற்சியை வழங்கவுள்ளார்கள் – என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ந-4,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்துத் தரப்புகளுமே பொறுப்போடு நடப்பது அவசியம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து உயிரிழந்த சம்பவம் வடக்கில் மீண்டும் கொந்தளிப்பையும் பதற்றத்தையும் போராட்டங்களையும் தூண்டியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் கொழும்பிலும்கூடப் போராட்டங்கள் இடம்பெற்றன. தமிழகத்திலும்கூட இலங்கைத் துணைத் தூதரகத்தின் முன்பாகப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து இன்று வடக்கு முழுவதும் முழுமையான கடை யடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. பதற்றமும் போராட்டங்களும் தொடர்வதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன.

மாணவர்களின் உயிரிழப்புக்குக் காரணமான துப்பாக்கிச் சூடு தெரியாமல் நிகழ்ந்துவிட்ட தவறு என்று, உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினரிடம் பொலிஸார் மன்னிப்புக்கேட்டுவிட்டாலும்கூட, உள்ளேயும் வெளியேயும் பதற்றமும் கொதிப்பும் அடங்கவில்லை.

பெரும்பாலும் சிங்களவர்களையே கொண்டுள்ள பொலிஸாரின் தான்தோன்றித்தனமான இந்தச் செயல், போரின் பின்னரான சிங்கள மேலாதிக்கத்தின் - பேரினவாதத்தின் - நீட்சியாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. நீண்டகாலமாக அடக்கி ஒடுக்கப்படும், அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்ட சமூகம், இது போன்ற நிலைகளில் உடனடியாகச் சந்தேகப்படுவதும் அச்சத்துக்குள் தள்ளப்படுவதும் இயல்பானதே.

இதனைப் புரிந்துகொண்டு அரசும் அரசியல் தலைமைகளும் மிகக் கவனமாகச் செயற்படவும் நகர்வுகளை மேற்கொள்ளவும் வேண்டிய தருணம் இது. கொழும்பு அரசும், பொலிஸாரும் இதுவரையில் பொறுமையுடனும் மாணவர்களின் உணர்வுகளுக்கு இடமளிக்கும் விதமாகவும் செயற்பட்டுவருகிறார்கள் என்பது வரவேற்புக்குரியது. அதேநிலை தொடர வேண்டும். பலத்தைப் பயன்படுத்துவதும், அச்சுறுத்தும் விதத்தில் நடந்துகொள்வதும் தொடர்ந்தும் தவிர்க்கப்பட வேண்டும். நெருக்கடி நிலைகள் புரிந்துணர்வோடு கையாளப்பட வேண்டும்.

இதுவெறும் தவறு மட்டுமேயல்ல, திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட - வேண்டுமென்றே செய்யப்பட்ட - கொலை என்று தமிழர்கள் உணர்வதற்கான பின்னணியை - கடந்த காலத்தை - கொழும்பும் அதன் அரச இயந்திரங்களும் புரிந்துகொள்வதும் அதற்கு மதிப்பளிப்பதும்தான் இந்த விடயத்தில் மிக முக்கியமானது. எதிர்காலத்தைத் தீர்மானிப்பதும்கூட.

நடந்துவிட்ட ஒரு தவறு மேலும் பல தவறுகளுக்கு வித்திட்டுவிடாவண்ணமும், வரலாறு திரும்பிவிடாவண்ணமும் பார்த்துக்கொள்வதற்கான கடமை எல்லோருக்கும் இருக்கிறது. அதில் கொழும்பு அரசுக்கு மட்டுமல்லாமல் தமிழர் அரசியல் தலைமைகளுக்கும் அதிகளவு பொறுப்புணர்வு உண்டு.

இப்போது கொந்தளிக்கும் உணர்ச்சிகளைத் தமது அரசியல் முதலீட்டாக்கிக்கொள்வதற்குச் சில அரசியல் சக்திகள் தயாராக இருக்கின்றன, முயற்சிக்கின்றன என்பதை உணர்ந்துகொள்வது ஒன்றும் மிகச் சிக்கலான விடயமல்ல. அவற்றுக்கு இடம்கொடாது, நிலமையைக் கையாள வேண்டியதும், நீதியை நிலைநாட்ட வேண்டியதும் அரசினதும், அரச இயந்திரங்களினதும் இன்றியமையாத கடமை.

2015 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான தீர்மானம் வலியுறுத்தும் ஒரு விடயம், குற்றங்களும் தவறுகளும் மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தலாகும். கொழும்பு அந்தத் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தால், இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழ்ந்திருக்கவும் மாட்டாது என்பதையும் இங்கு அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.



# எழுக தமிழ் சத்தியங்கள்

**எழுக தமிழ் மீதான மறுபார்வை 4**

இலைஜா ஹுல்

நடப்பவற்றின் சரி, பிழைகளைத் தாண்டி, அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். அந்தவகையில், எழுக தமிழ் நிகழ்வு தமிழ் மக்களுக்கும், அதிருப்தியுற்றிருக்கும் சில அரசியல்வாதிகளுக்கும், அதே மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியற் தலைமைகளுக்கும் சில முக்கியமான செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கின்றது.

முதலாவதாக, மக்களாகிய எமக்கு, நாம் எங்கிருக்கின்றோம் எங்கு செல்லப் போகின்றோம் என்பதில் தெளிவுவேண்டும். திலீபன் உயிரிழந்து மூன்று தசாப்தங்களாகியும் இன்றும் நாம் திலீபன் முன்வைத்த அதே கோரிக்கைகளையே கேட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதைக் கவனத்தில் கொள்கிறோம். இன்று நாமிருக்கும் நிலையில், மீண்டுமொரு அழிவிற்கு இட்டுச் செல்லக் கூடாதென்ற அர்ப்பணிப்பே, அந்தக் கொள்கையின் மீதான பற்றுறுதியே இன்றைய தமிழ்த் தலைமைகளிடம் இருக்கவேண்டிய அடிப்படைப் பண்பு.

தம்முடைய அரசியல் வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்காக, தாம் எவ்வித அர்ப்பணிப்புக்கும் தயார் என்றும் தமிழினம் வீதிக்கிறங்கித் தன் வீரத்தை நிரூபித்தால் விடிவு நிச்சயம் என்றும் பயனற்ற வீர வசனங்களைப் பேசி மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும் அரசியல்வாதிகளைத் தொடர்வது எம்மை மீண்டும் அழிவுக்கும், ஆபத்துக்குமே இட்டுச் செல்லும். இந்தத் தலைவர்களின் சுய- அர்ப்பணிப்புக்களின் இலட்சணத்தை நாமறிவோம். இவர்களை நாம் இனங்கண்டு அவர்களது வெற்று அரசியலை வேரறுக்கவேண்டும்.

கடந்த காலத்தை நிதானமாக இரைமீட்டு, அதிலிருந்து பாடங்களைக் கற்கும் மக்கள் இயக்கமே எமது தற்காலத் தேவை. இந்த மக்கள் இயக்கம் சிங்கள மக்களிடமும், முஸ்லிம்களிடமும் சமஷ்டி ஆட்சிமுறை, சமயச்சார்பு இல்லாத அரச கட்டமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கு மீள்- இணைப்புத் தொடர்பில் நம்பிக்கையூட்டும் விதத்தில் பேசி இணக்கம் காண முயற்சிக்கவேண்டும்.

சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் மேலும் விரோதிகளாக்கும் முயற்சிகள் எந்த நன்மையையும் தரப் போவதில்லை. தேவைப்படுவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் முற்போக்காக்கும், ஜனநாயக மயப்படுத்தும் மக்கள் இயக்கமேயன்றி, வெற்று முழக்கங்களாலும், வெறுந் தேசியவாதத்தாலும் எமது அரசியல் தலைமைகளை மேலும் தீவிரப்போக்காக்கும் தமிழ் மக்கள் பேரவை போன்ற இயக்கங்கள் அல்ல. அவற்றால் எமக்கு விடிவில்லை.

இரண்டாவதாக, எழுக தமிழ் நிகழ்வில் திரண்ட கூட்டத்தையும், விக்னேஸ்வரனையும் வைத்துக் கொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் என்போர் அரசியல் மீள்பிரவேசம் செய்ய முயல்வார்களானால் மூக்குடைபடவே நேரும்.

எழுக தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டோர் தொகை 6,000 முதல் 10,000 பேர் வரை ஆகும். ஆனால், பேரணி முடிந்த கையோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் 30,000 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக அறிவித்திருந்தார். யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவுப் பத்திரிகையான ஒன்று, இன்றுவரை இந்தத் தொகையை 50,000 (பின்னர் சற்று இறங்கி வந்து 45,000 என்றது வேறுவிடயம்) எனத் தொடர்ந்து அறிவித்து வருகின்றது. இதுவெல்லாம் எழுக தமிழ்ப் பேரணியின் உள்நோக்கங்களையும், ஏற்பாட்டாளர்களின் வங்குரோத்து அரசியலையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

அத்தோடு, ஏதோ தமிழரசுக் கட்சியைத் துரோகியாகக் காட்டி அரசியல் செய்து விடலாம் என்கிற எண்ணப்பாடும் தப்புக் கணக்கே! ஒட்டுமொத்தமாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் மாத்திரமே எழுக தமிழ்ப் பேரணியில்

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துகொண்டிருந்தார்கள்.

மேலும், 2010இல் கூட்டமைப்பைப் பிரிந்த பின் தொடர்ந்த ஆறாண்டு காலத்தில் கஜேந்திரகுமார் சாதித்தது, கடந்த பொதுத் தேர்தலில் விஜயகலா அம்மையாரிடம், கூட்டமைப்பிற்குச் சேர வேண்டிய ஆசனத்தைத் தாரை வார்த்தது மாத்திரமே. எங்கும், எதிலும், என்றும் கூட்டமைப்பை எதிர்ப்பதை வாழ்க்கையாக்கிவிட்டு இன்று கூட்டமைப்பின் உழைப்பின் விளையாகக்கிட்டிய வட மாகாண முதலமைச்சர் என்கிற தலைமைப் பீடத்தின் பின்னால் தன் அரசியல் எதிர்காலத்தைக் காக்கத் தஞ்சம் புகுந்திருப்பதே இவரது ஆளுமையின் இலட்சணம்.

உள்ளிருந்து குழப்பிச் சாதிக்கலாம் என்று முயன்று அதில் தோற்று, தொடர்ந்து வந்த தேர்தலிலும் தோற்று, பின்னர் அதே தலைமைகளிடம் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு அலைந்து தவித்துத் தரித்த பின்னர், கடைசியாக வழியேதுமின்றி யார் வட மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் கூடாதென்று கூவி வந்தாரோ, அதே நபருக்குப் பின்னால் தன் இருப்பைத் தக்க வைக்க ஒதுங்கியிப்பதே சுரேஷ் பிரேமச்சந்திரனின் நகைப்பிற்குரிய, அருவருக்கத்தக்க அரசியல்.

பேரவையின் சேனைத் தளபதிகள் இப்படி, சக்கரவர்த்தி எப்படி? விக்கினேஸ்வரன் தனது அரசியல் நிலைப்பாடுகளில் எதுவித தெளிவோ, உறுதியோ இன்றித் தள்ளாடிக் கொண்டிருக்கிறார். 2013 வட-மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் தெரண தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றில் நீங்கள் இனிக் கூட்டமைப்பின் கையில் பொம்மையாகி (தீவிர வாதியாகி) விடுவீர்களா? என்ற தொனியில் விடுக்கப்பட்ட கேள்விக்கு கூட்டமைப்பு அரசியல் வாதிகள் தாம் நினைத்ததைச் சொல்லும், செய்யும் சூழ்நிலை போருக்கு முன்னர் இருக்கவில்லை. அன்று பேசியது விடுதலைப் புலிகளின் துப்பாக்கி ரவைகளே, கூட்டமைப்பு அரசியல்வாதிகளல்லர். இன்று போரோய்ந்து விட்டது. அவர்கள் (கூட்டமைப்பினர்) என் போன்றவர்களே (மிதவாதிகளே) எனப் பதில் சொல்லியிருந்தார்.

மாகாண சபைத் தேர்தலுக்கு மிகச் சொற்ப நாள்களே எஞ்சியிருந்த நிலையில் வல்வெட்டித்துறைப் பரப்புரை மேடையில் வைத்து யார் கூட்டமைப்பை அடக்கித், தீவிரப் போக்காக்கி வைத்திருந்தவர்(கள்) என்று தெற்கில் அறிவித்திருந்தாரோ, அதை முற்றாக மறந்து, மறைத்து, தேர்தல் வாக்குகளைக் குறி வைத்துப் பிரபாகரன் ஒரு மாவீரன் என முழங்கினார்.

2015 பொதுத் தேர்தலில் முற்றாகக் கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்பட்டு அதில் தோல்வியடைந்த பின்னர், கிளம்பியிருந்த சூட்டைத் தணிக்கவென நல்லிணக்கத் தூதுவராக மாறி நாக விகாரையின் தலைமைப் பிக்குவைச் சந்தித்து வணக்கம் செலுத்தினார்.

பின்னர், கடந்த வருட நாக விகாரைச் சுற்றுலாவை மறந்து, எழுக தமிழ் நிகழ்வில் சிங்கள - பௌத்த மயமாக்கலை நிறுத்து என வீர முழக்கம் செய்தார்.

எழுக தமிழில் எழுந்தவர்கள் முற்றாக அமர்ந்து முடியவில்லை, தனது முழக்கத்துக்கு எதிராகத் தெற்கில் கிளம்பிய எதிர்ப்பலையைச் சமாளிக்க ஜனாதிபதி சிறிசேன முன்னிலையில் சட்ட பூர்வமாக விகாரைகளைக் கட்டுவதற்குச் சம்மதம் என்ற கருத்துப்பட சிங்களத்தில் பதுமையாகப் பேசி வைத்தார். போதாதென்று, புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்டும் பாத யாத்திரையை சிங்கக் கொடி அசைத்து தொடக்கியும் வைத்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் முன்னைய கருத்துக்களின்படி, சிங்கக் கொடியை அசைப்பதென்பது தமிழ் அரசியலை தமிழ்த் தேசிய நீக்கம் செய்யும் மாபெருங்குற்றச்செயல்.

> **தம்முடைய அரசியல் வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்காக, தாம் எவ்வித அர்ப்பணிப்புக்கும் தயார் என்றும் தமிழினம் வீதிக்கிறங்கித் தன் வீரத்தை நிரூபித்தால் விடிவு நிச்சயம் என்றும் பயனற்ற வீர வசனங்களைப் பேசி மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும் அரசியல்வாதிகளைத் தொடர்வது எம்மை மீண்டும் அழிவுக்கும், ஆபத்துக்குமே இட்டுச் செல்லும். இந்தத் தலைவர்களின் சுயஅர்ப்பணிப்புக்களின் இலட்சணத்தை நாமறிவோம். இவர்களை நாம் இனங்கண்டு அவர்களது வெற்று அரசியலை வேரறுக்க வேண்டும்.**



ஆக, இறுதியில் எழுக தமிழிற்குத் தலைமை தாங்கியவராலேயே எழுக தமிழ் ஏற்பாட்டாளர்களின் வீறு கொண்ட வெளிப்பாடுகள் யாவும் சில நாள்களுக்குள்ளேயே பெட்டிப் பாம்பாகச் சுருள நேர்ந்தது.

இந்தக் கூட்டணிதான் தமிழினத்தின் புதிய மீட்பர்களா? இவர்களை நம்பித்தான் நாம் வீதிக்கிறங்கி, வீரத்தை வெளிக்காட்டி, விடியல் தேடப் போகின்றோமா? புளுகுக் கதைகளையும், போலித் தீர்க்கதரிசனங்களையும் தவிர்த்து இவர்களிடமிருந்துபிறிதொன்றும்பிறக்காது. நிதர்சனம் இதுவே: என்று தன் கட்சி நடுநிலை மற்றும் மக்களியக்கப் போக்காட்டல்களை விலக்கி, பேரவை தேர்தல் அரசியலிற்குள் தாவுகின்றதோ, அன்று பேரவையையும், அதன் தலைமைகளையும் (மீண்டும்) தமிழ் மக்கள் தீர்க்கமாக நிராகரிப்பார்கள்.

இறுதியாக, இந்த ஊர்வலம் தமிழ்மக்களின் அரசியற் தலைவர்களிடம் ஜெனீவாவிலும், இலங்கை நாடாளுமன்றத்திலும், புதிய அரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்களிலும் அவர்கள் எவற்றையெல்லாம் சாதித்தாலும் இறுதியில் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களை இழந்தால் அது தம் செயற்பாடுகளைப் பொருளற்றதாக்கும் என்ற சத்தியத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றது.

தாம் பிரதிநிதித்துவம் செய்யும்மக்களோடுநெருக்கமான உறவுகளைப் பேணுவதே தமிழ்த் தலைமைகளின் தலையாய கடன். என்று இந்த உறவினில் இடைவெளிவிழுகின்றதோ, அன்று வீட்டிற்குள் புகுந்து சூறையாட பல சக்திகள் காத்திருக்கின்றன. தேர்தல் காலங்களில் மக்களோடிருக்கும் தொடர்ச்சியான இடைப்படுதல், உரையாடல் என்பவை பின்னரும் தொடர வேண்டும். அண்மையில் வவுனியாவில் நடந்தது போன்ற காரசாரமான கட்சிக் கூட்டங்கள் வடக்கு - கிழக்கு எங்கும் நடக்க வேண்டும். தொடர்ச்சியான உரையாடல்களிருக்கும்போது மக்கள் மனம் தளர்ந்து போக மாட்டார்கள். மக்களே பலம்! மக்களே மகுடம்!

*(முற்றும்)*

# வாகனச்சாரதிகள் கவனத்தில் கொள்வார்களா?

வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பல்வேறு தரப்பினராலும் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமூக நலனோம்பு நோக்கிலான இந்த நடவடிக்கை மிகவும் அவசியமானதொன்றாகும் என்பதற்கு தினமும் நடைபெற்று வரும் விபத்துக்களே சான்றாகின்றன. இந்த வகையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் சுட்டிக் காட்டப்படாத ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மோட்டார் வாகனங்களைச் (கார், வான், ஓட்டோ, மோட்டார் சைக்கிள்) செலுத்துவோர் தமது வாகனங்களின் சமிக்ஞை (சிக்னல்) விளக்குகளைப்பயன்படுத்துவதில் காட்டும் அசண்டையீனம் வீதிகளில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. அந்தக்கால வாகனங்களில் நவீனமயமான சமிக்ஞை விளக்குகள் கிடையாது. கூடுதலாக நின்று நிதானத்துடனே இடது வலதுபக்கம் திரும்புவர். ஆனால் இன்றைய வாகனங்களைச் செலுத்துவோரின் சமிக்ஞை விளக்கு வலதுபக்கம் திரும்புவதற்காக ஒளிரும்.

ஆனால், அந்தவாகனம் திரும்பாமல் நேரே செல்லும். இவர் திரும்பப் போகிறாராக்கும் என பின்னே வரும் நாங்கள் வேகத்தைக்குறைத்து கட்டுப்படுத்துவோம். ஆனால்அவர் நேரே சென்று கொண்டிருப்பார். எதிரில் வரும் வாகனத்தின் சாரதிக்கு இது பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமைகிறது. வலதுபக்கமோ இடதுபக்கமோ திரும்புவதற்காக எப்போதோ எங்கேயோ சற்று நேரத்துக்கு முன்பு போட்ட சமிக்ஞை விளக்கை அந்த வாகனத்தைச் செலுத்துபவர் அணைக்காமல் விடுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணராதவரைக்கும், அந்தவாகனத்துக்குப் பின்னேயும், எதிரிலேயும் வருபவருக்குப் பாதிப்பை உண்டு பண்ணலாம் என்பதை ஏன் இவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

அதுவும் இவர் சமிக்ஞைவிளக்கை ஒளிரவிடும்போது, இவரது நேர்முன்னே இருக்கும் ஹான்டிலில் மீற்றர் கருவி பொருத்தியுள்ள இடத்தில் சமிக்ஞை விளக்கு ஒளிர்கிறது என்பதை நினைவூட்டும் சிறுஒளிச்சமிக்ஞையும் இவருக்குத் தெரியக்கூடியதாக இவரது கவனத்தை ஈர்க்கும் விதமாக விட்டுவிட்டு ஒளிரும். சிலசமயம் ஒலியையும் எழுப்பும்.

இப்படியான நவீன வசதிகள் பொருத்தப்பட்டு இருக்கும் போது தம்மால் ஒளிரச்செய்யப்பட்ட சமிக்ஞை விளக்கை அணைக்காமல் செல்பவர்களுக்கும் சேர்த்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற் கொண்டால் மிகவும் நல்லது.

*கி.வே.கிருஷ்ணானந்தன்*
*யாழ்ப்பாணம்.*

# உதயனின் பேனாவில் உணர்வாகியது சிவசேனா; அம்மனை உயிர்ப்பித்தது சிவசேனை

21.10.2016 உதயனில் பிரசுரமாகிய முகப்புச் செய்தி, சைவ சமயத்தவர்களுக்குப் பெரும் ஆறுதலையும் பாதிக்கப்பட்ட அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அடியார்களுக்கு ஒரு பாதுகாப்பையும் அளித்தது எனலாம். சிவசேனா அமைப்பினர் பேனாவோடும் அறிக்கைகளோடும் மட்டும் நின்றுவிடாமல் மிகவும் துணிந்து தாக்குதல் நடைபெற்ற ஆலயத்துக்கு நேரடியாகச் சென்று உரிய தரப்போடு அளவளாவி ஆவனசெய்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் பொலிஸார் பௌத்த பீடங்களோடு கலந்துரையாடி ஏற்பட்ட அச்சங்களுக்கு விடிவு தந்திருப்பது நன்றியோடு பாராட்டப்பட வேண்டிய தொன்று. உதயன் பிரசுரித்த விதம் அற்புதம்

*கே.எஸ்.சிவஞானராஜா*

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிலிப்பைன்ஸிலிருந்து விலகி சீனாவைப் புரட்டியது ஹைமா

பீஜிங், ஒக். 25
சீனாவை கடந்த சில நாள்களாக ஹைமா சூறாவளி தாக்கிய நிலையில், குறித்த சூறாவளியால் ஏற்பட்ட இழப்புத் தொடர்பான விவரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
ஹைமா சூறாவளி கடந்த சில தினங்களாக சீனாவின் தெற்குப் பகுதியைப் பதம் பார்த்தது. ஹைமா தற்போது வலுவிழந்துள்ள நிலையில் சூறாவளியால் ஏற்பட்ட இழப்புத் தொடர்பான விவரங்களை அந்த நாடு அறிவித்துள்ளது.
13 பேர் உயிரிழந்துள்ளனர். 7 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 27 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். 2 ஆயிரத்து 800 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. ஒலு லட்சத்து 78 ஆயிரம் ஹெக்ரெயர் அளவிலான பயிர்கள் நாசமடைந்தன. ஒட்டுமொத்தமான பொருளாதார இழப்பு 517 மில்லியன் டொலர் எனக் கணக்கிடப்பட்டது.
இடிபாடுகள் இன்னும் அகற்றப்படவில்லை. எனவே உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சமும் வெளியிடப்பட்டது.
சீனாவை, ஹைமா தாக்க முன்னர் பிலிப்பைன்ஸில் நிலைகொண்டிருந்தது. மணிக்கு 270 கிலோ மீற்றர் வேகத்தில் அங்கு கடும் காற்று வீசியதில் பிலிப்பைன்ஸ் கடும் சேதத்தை எதிர்கொண்டது. நிலச் சரிவுகள், கடும் மழை, கடும்காற்று என்பன காரணமாக பிலிப்பைன்ஸின் ஏழு மாகாணங்களில் உள்ள கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். பிலிப்பைன்ஸிலிருந்து விலகிய ஹைமா சீனாவைத் தாக்கிய போது, பிலிப்பைன்ஸும் சரிக்கா எனும் சூறாவளியால் தாக்கப்பட்டது. 3 பேர் உயிரிழந்ததுடன், 10 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சரிக்காவின் தாக்கமும், சேத விவரங்களும் இன்னும் முழுமையாகக் கணக்கிடப்படவில்லை. (ம-ரி4)

# மோசூல் போரா... பாப்பரசர் கவலை...

பக்தாத், ஒக். 25
மோசூல் நகரில் நடைபெற்றுவரும் ... போருக்குத் தனது கவலையைத் தெரிவி... பாப்பரசர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பெரும் ப... இருந்த ஈராக்கின் மோசூல் நகரை மீ... பெரும் போர் அண்மையில் ஆரம்பித்தது... கிராமங்கள் மீட்கப்பட்டன. அரச படை... தாக்குதல்களிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமை... தாக்குதல்களிலும் அகப்பட்டு நூற்றுக்... கான பொதுமக்கள் உயிரிழக்கின்றனர். ... நிலையில் போரால் பொதுமக்கள் அ... துன்பங்களுக்குத் தனது ஆழ்ந்த கவலை... தெரிவித்தார் பாப்பரசர்.
ஈராக்கின் மோசூல் நகரை மீட்கும் ... ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. ... தரப்பினரதும் தாக்குதல்களுக்கு இல... ஏகப்பட்ட குழந்தைகளும் பொதுமக்... உயிரிழக்கின்றனர். அவர்களின் சா... தேவையற்றன. தவிர்க்கப்பட வேண்டிய... பாப்பரசர் மேலும் தெரிவித்தார். (ம...



# மோசூலை மீட்கும் போ... களமிறங்கியது துருக்...

மோசூலை மீண்டும் கைப்பற்றும் போரில் ஈராக் அரசுடன் இணைந்தது துருக்கி.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. ஈராக்கின் மோசூல் நகரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தது.
இந்த நகரே ஈராக்கின் இரண்டாவது பெரிய நகராகும். நகரை மீட்கும் போரில் ஈராக் அரசு கடந்த சில தினங்களுக்கு முன்னர் களமிறங்கியது. 35 ஆயிரம் ஈராக் இராணுவத்தினர் உள்ளடங்கலாக 90 ஆயிரம் படையினர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்... எதிராக கொடும்... குதல்களை ... கேற்றி வருகின்... கடந்த ஏழு ந... ளாக இடம்... போரில் 15 கிர... கள் மீட்கப்பட்டன. ... நிலையில் ஐ. ... ஐ.எஸ். அமைப்... எதிராக இரா... பலத்தை அதிகரி... செய்யும் வித... துருக்கியும் கள... குதித்துள்ளது.
குர்தீஸ் போர... களின் அழைப்... இணங்கவே ... களத்தில் குதித்... துருக்கி தெரிவி... துருக்கி – ஈராக் ந... பிரதி பலிக்கும் ... யில் இந்த இரா... உதவி அமைந்... தாக ஈராக் பிர... ஹைடர் அல் ... டாடி நன்றி தெ... தார். (ம-...

## ஹைட்டி

# தலைமறைவாகிய கைதிகளில் பத்துப் பேர் மடக்கிப் பிடிப்பு

ஹைட்டி நாட்டின் வடபகுதியான அர்காயே மாநிலத்தில் உள்ள மத்திய சிறையிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகிய 174 கைதிகளில் 10 பேர் மீண்டும் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.
குறித்த சிறைச்சாலையில் 300 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் காலை குளியலுக்காக கைதிகளைத் திறந்துவிட்ட போது சிறைக் காவலர்களின் ஓய்வு அறைக்குள் நுழைந்த கைதிகள் இரு காவலர்களைக் கொன்றுவிட்டு அங்கிருந்த துப்பாக்கிகளையும் எடுத்துக் கொண்டு தலைமறைவாகினர் என சிறைச்சாலையின் நிர்வாகம் தெரிவித்தது.
இதனையடுத்து பல்வேறுபட்ட இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து அவர்களை மீண்டும் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரம் காட்டினர். அவர்களில் பத்துப் பேரை மீண்டும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஏனையோர் தேடப்பட்டு வருகின்றனர். (ம-ரி4)



# ஜப்பானில் தொடர் குண்டுவெடிப்பு

ரோக்கியோ, ஒக். 25
ஜப்பானின் உட்சனோமியா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பால் ஒருவர் சாவடைந்ததுடன் மூவர் படுகாயமடைந்தனர்.
கார்க்குண்டுத் தாக்குதல்களாகவே குறித்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. உட்சனோமியாவில் உள்ள பூங்காவில் பல கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை இந்த வெடிச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-ரி4)

## அமெரிக்கா

# கலிபோர்னியாவில் பஸ் விபத்து; 13 பேர் சாவு; பலருக்குக் காயம்



வொஷிங்ரன், ஒக். 25
அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் பயணிகள் பேருந்தொன்று நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.
பயணிகள் பேருந்தும், லொறி ஒன்றுமே அவ்வாறு விபத்துக்குள்ளாகின. பேருந்தின் செலுத்துநர் உள்ளிட்ட 13 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். 30 இற்கும் அதிகமானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
இரு வாகனங்களுக்கும் இடையில் ஏற்பட்ட வேகமாற்றமே விபத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணமும் படிப்பும்

பொருளாதாரம் வாழ்க்கையின் அச்சாணியாக மாறியுள்ள கால கட்டத்தில், பொருளாதாரத்தை ஈட்டும் பிரதான மூலமாகக் கல்வி காணப்படுகின்றது. படித்தால் வேலை கிடைக்கும் என்ற பேச்சு நம்மவரிடம் உண்டு. ஆனால் படித்த பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டம், தற்போது அதன் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. படிப்பதைவிட எதைப் படிக்கின்றோம் என்பதே பிரதானம். எல்லோராலும் எல்லாம் செய்ய இயலாது. இந்தச் சூழலில், எமக்கான பாதையைத் தீர்மானிக்கும் பொறுப்பு எம்மிடம்தான் உள்ளது.

தற்போதைய காலச் சூழலில், ஆசிரியர், மருத்துவர், சட்டத்தரணி, பொறியியலாளர் போன்ற உத்தியோகத்தர்களைக்காண்பது இலகுவாகவுள்ளது. ஆனால் கிணறு இறைக்க, கூலிவேலை செய்ய, ஆள்களைத் தேடுவதும், சிறப்பான மேசன் பணியாளர்களைச் சந்திப்பதும், கண்டுபிடிப்பதும் இயலாத காரியமாக மாறியுள்ளது. வேலையில் தரம் குறைந்த வேலை என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு பணியாளர்களும் துறைசார் வல்லுநர்களாக உள்ளனர். அனைவரது முயற்சியும் உழைப்பும் பணம் என்ற ஒரு அலகையே குறியாகக் கொண்டுள்ளது.

தற்போது உத்தியோகத்தில் இருப்பவர்களில் எவரும் சேவை நோக்குடன் செயற்படுவது இல்லை. சம்பளத்துக்கு வேலை; அவ்வளவுதான். இந்தச் சூழலில், அதிகரித்துள்ள கல்விச் சதவீதம் குறிப்பிட்ட வேலை வாய்ப்புக்களில் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. அனைவரும் ஒரேமாதிரியான பணத்தைத்தான் பயன்படுத்துகின்றனர். இன்று நான் வைத்திருக்கும் பணம், நாளை இன்னொருவரின் கைக்கு மாறும். இதுதான் நாணயச் சுழற்சி. மருத்துவரின் சம்பளப் பணம் இது, கூலியாளின் சம்பளப் பணம் இது என்ற எந்த வேறுபாடும் இல்லை. அனைத்து ஆயிரம் ரூபாத் தாள்களிலும் மயில்தான் உள்ளது. ஆக நாம்தான் மதிப்பை வகைப்படுத்துகிறோம்.


படிப்பு, பட்டம் அனைத்துமே இந்தப் பணம் என்ற அலகுக்குத் தான். ஆகவே இதைத்தான் படிக்க வேண்டும் என்ற தேவை தற்போது இல்லை. மாறாக எதைப் படித்தால் நன்கு சம்பாதிக்கலாம் என்பதே இளைஞர் மத்தியில் தோன்றியுள்ள எண்ணக்கரு. அது சரியானதே. உத்தியோகத்தில் கிடைக்கும் சம்பளத்தைவிட, கூலித் தொழில்களில் கிடைக்கும் வருமானம் அதிகரித் துள்ளது.

மேம்பட்ட நாடுகளில் 18 வயதைத் தாண்டிய இளைஞர்கள் தமது சொந்த உழைப்பில் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். சிறு தொழில்கள் மூலமே அவர்களது சம்பாத்தியம் சாத்தியமாகின்றது. ஆனால் அவ்வாறான வேலைகள் அவர்களுக்குச் சிறந்த அனுபவத்தை வழங்குகின்றன. கஷ்டம், கவலை, அவமானங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை வளர்கின்றது. இதன் பின்னர் படித்துச் சிறந்த பதவியை அடையும்போது, முகாமைத்துவத்தைச் சிறப்பாக மேற்கொள்கின்றனர்.




ஆனால் நமது நாட்டில் நேரடியாகப் பதவிகள் கிடைப்பதால் கீழ்த்தட்டுப் பணியாளர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் மனோபாவம் குறைவாகக் காணப்படுகின்றது. இதனாலேயே அவர்கள் படித்த முட்டாள்கள் என விமர்சிக்கப்படுகின்றனர். படிப்பது சிறந்ததுதான். ஆனால் எதைப் படிக்கிறோம் என்பதில் நாம்தான் அக்கறையுடன் செயற்படவேண்டும். தனித்துவமான செயற்பாடுகளை சந்தைப்படுத்துவது இலகு. வருமானமும் அதிகம். எந்தத்துறையிலும் தனித்துவத்தைப் பாதுகாப்பதுதான் தற்காலத்தின் சூட்சுமம். ஆகவே படித்தவர்கள் அறிவாளிகளும் அல்லர், படிக்காதவர்கள் முட்டாள்களும் அல்லர்.

# ஒக்ரோபர் மாத எண் பலன்



## 9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதம் எப்படியும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்த்தவர்கள் உங்களிடம் மனம் திருந்தி மன்னிப்புக் கேட்பார்கள்.
மேல்மட்ட அரசியல்வாதிகள் உதவுவார்கள். வீடு கட்ட அனுப்பியிருந்த கட்டட வரைபடத்துக்கு அரசு அனுமதி கிட்டும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். அரசியலில் செல்வாக்குக் கூடும். சகோதரர்களின் அரவணைப்பு அதிகரிக்கும்.
பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். என்றாலும் தொண்டை புகைச்சல், கழுத்து வலி, வேலைச்சுமை, வீண் பதற்றம் வந்துப் போகும். உறவினர், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். யாருக்கும் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். விலை உயர்ந்த நகைகளை கவனமாக கையாளுங்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் உதவுவார்கள்.

**கன்னிப் பெண்களுக்கு:**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை தள்ளுபடி விலையில் விற்று முடிப்பீர்கள். மிகுதிப் பணங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் நேரகாலம் பார்க்காமல் உழைத்தும் எந்தப் பயனும் இல்லையே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். மேலதிகாரியால் சின்னச் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். கலைத்துறையினர்கள் மூத்த கலைஞர்களின் வழி காட்டல் மூலம் வெற்றியடைவீர்கள். திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 9, 6, 24, 21, 18**
**அதிர்ஷ்ட எண்கள்: 1, 7**
**அதிர்ஷ்ட நிறங்கள்: ரோஸ், வெளிர் மஞ்சள்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, புதன்**


## லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு

ஜாதகத்தில் லக்கினத்தின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். லக்கினம் என்பது ஜாதகத்தில் முதல் வீடாகும். இது ஜாதகரின் குணாதிசியத்தை நிர்ணயிக்கிறது. பன்னிரு லக்கினத்தில் பிறந்தவர்களின் பொதுவான பலன்களை இங்கு காணலாம்.

**மேட லக்கினத்தில் பிறந்தவர்கள்**
இவர்கள் கம்பீரமான தோற்றம் உடையவர்கள். செல்வங்களைச் சேர்ப்பதில் கருத்துள்ளவராக இருப்பார்கள். அறிவும் அழகும் பொருந்தியவர்களாக இருப்பர். பலர் விரும்பும் வண்ணம் நடந்துகொள்வார்கள்.
முன்கோபம், பிடிவாதம் அதிகம் கணப்படும். முகத்திலும், தலையிலும் தழும்பு இருக்கலாம். ஆணித்தரமான பேச்சு இருக்கும். 45 வயதுக்கு மேல் எதிர்பாராத பண வசதி உண்டாகும். உடன்பிறந்தோரால் உதவிகள் கிடைப்பது கஷ்டமான காரியம். கடுமையாக உழைக்கக்கூடியவர்கள். சக்திக்கு மீறிய காரியங்களில் ஈடுபட்டு பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வார்கள். வாழ்க்கைத் துணை விடயத்தில் ஏமாற்றம் உண்டாகும். அல்லது வாழ்க்கைத் துணை உடல்நலக்கோளாறுகளால் அவதிப்படுவார். இவர்கள் பவள மோதிரம் அணிவதன் மூலம் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ளலாம். பிறரை அளவுக்கு மீறி நம்புவது கூடாது. பிடிவாதத்தை தளர்த்திக்கொள்ளவும் பிறர் சொல்வதையும் கேளுங்கள்.
இவர்களுக்கு சூரியன், குருவோடு சனி சம்பந்தப்பட்டால் குரு எப்போதும் தன் பலனையே கொடுத்து வருவார். சூரியனும் குருவும் யோகக்காரர்கள். இருவரும் ஒன்று கூடினால் நல்ல பலன்களையே கொடுத்து வருவார்கள். புதன், சுக்கிரன், சனி, இந்த மூவரும் இவர்களுக்கு பாவிகள். புதன் மூலம் இறப்பு இல்லை. சனி, சுக்கிரன் மூலம் இறப்பு ஏற்படும். லக்கினத்தில் சனி நின்று நீசம் அடைந்தால் போராட்ட மான வாழ்க்கையாக இருக்கும்.

**நாளை**
**ஐப்பசி-10**
புதன்கிழமை - 26.10.2016
திதி: ஏகாதசி பி.ப. 05.37
நட்சத்திரம்: பூரம் பி.இ.04.05
ராகுகாலம்:12.03-01.33 வரை
சுபநேரம்: 04.33-06.03 வரை
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகத்தின் முதலீடுகளாக மாணவரை உருவாக்கும் முதுசங்களே பாடசாலைகள்

அன்ரனி பீற்றர்

மனித வாழ்க்கையிலே பிள்ளைப் பருவம் முக்கியமான பருவமாகும். வருங்கால வாழ்வுக்கு அத்திபாரம் அமைக்கப்படுகின்ற காலமாகும். ஒவ்வொருவரின் பிற்கால வாழ்வு சிறப்புள்ளதாயும் சிறப்பற்றதாயும் அமைந்துவிடுவதற்கு குடும்பச் சூழமைவும், பாடசாலைச் சூழமைவுமே பெரும் பங்கை வகிக்கின்றன என்பது, சமூகவியலாள்ர்களின் கூற்றாகும். குடும்பமும் பாடசாலையும் சிறப்பாக அமைகின்றபோது அங்கு உருவாகும் மாணவர்கள் பெறுமதி மிக்க சமூகத்தின் முதலீடுகளாகக் கருதப்படுவார்கள்.

கல்வி என்பது மற்றைய எந்த உயிரினங்களுக்கும் வழங்கப்படாத மனிதனுக்கு கடவுள் தந்த மாபெரும் கொடையாகும். இந்தக் கொடையை முறைசார்ந்தும், முறைசாராமலும் வழங்கும் நிறுவனங்களே பாடசாலைகளாகும். அறிவு, பண்பு, பண்பாடு, கலாசாரம் என்பன பாடசாலைகளில் இருந்தே சமூகத்தைச் சென்றடைகின்றன. ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது? இதன் அருமைபெருமைகள் இந்தக் காலத்திலே தான் வெளிப்படையாகத் தெரிகின்றன. முன்னர் மதிப்பு, மரியாதை, அடக்கம், ஒடுக்கம் குடும்பத்திலிருந்து பாடசாலை சமூகத்துக்குக் கடத்தப்பட்டன. அறிவுசார்ந்த பண்பாடு மிக்க கீழ்ப்படிவுள்ள தகைமைச் சான்றோர்கள் உருவாகி; உருவாக்கினார்கள், அந்த அறிவுப்பண்பாடு சமூகத்திலே ஒளிவீசியது. தன் சமூகத்தில் மட்டுமல்லாது ஏனைய சமூகங்களிலும் உலகு சார்ந்தும் எம் முன்னையவர்கள் மதிப்பார்ந்தவர்களாக கல்வியியலாளர்களாக முதன்மை நிர்வாகிகளாகப் புகழ் பெற்று விளங்கினார்கள். அதற்குக்காரணம் அறிவுசார் புலமையும், பாடறிந்து ஒழுகிய பண்பாடும் தான்.

அன்றும் இன்றும் பாடசாலைகள் அதே பணியை ஆற்றிக் கொண்டு வந்தாலும், இன்று பலவகையான வளங்கள், வசதிகள், கவின்நிலைகள், தர உள்ளீடுகள் கிடைக்கப் பெறுகின்றபோதும், மொழிப்புலமை சார்ந்த, அறிவார்ந்த, பண்புசால் வெற்றியாளர்களைச் சமூகம் பெறமுடியாமல் உள்ளது என்? என்பது தொக்கிநிற்கும் வினாவாகும். இதற்குப் போரின் விளைவுகளா? புதுமையின் வரவுகளா? தொழில்நுட்ப சாதனங்களின் பங்களிப்பா? போதை நுகர்வுகளின் பாதிப்பா? உலக மயமாக்கல்களின் உள்நுழைவா? இணையத்தளங்களுக்குள் ஈர்ப்பு நிலையா? அல்லது திணிக்கப்படும் இனநெருக்கீடுகள் தரும் விளைவா? ஏதோ ஒன்றோ, பலவோ எம்பிள்ளைகள் மேல் எதிர் விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவைகள் கண்டறியப்பட்டு, பதிலீடான பரிகாரங்கள் மேற் கொள்ளப்படாவிட்டால் எம்சமூகம் பரிதாபத்துக்குரியதாக மாறுவதைத் தடை செய்ய முடியாது?

கல்வியே ஒரு மனிதனை முழுமனிதனாக்குகின்றது. வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் எதிர்ப்புக்கள் சிறுமைகளையெல்லாம் பின்தள்ளி முன்னேறிச் செல்லும் ஆற்றலைக் கொடுப்பது கல்விச் செல்வமாகும். கற்கவேண்டிய பருவத்திலே ஆரம்பித்து பல படிநிலைகளைத்தாண்டி இடைநிலைக்கல்வி, உயர் கல்வியின் ஆரம்பநிலைகளைக் கற்று, உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு வரை மாணவர்களை உருவாக்கிவிடுவது பாடசாலை என்ற முதுசங்களாகும். பாடசாலை என்னும்போது அங்கு பயில்கின்ற மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் முகாமை செய்யும் அதிபரையுமே குறித்து நிற்கின்றது. முற்காலத்தில் அறிவைக் கொடுக்கின்ற, அறிவைப் பெறுகின்ற களஞ்சியங்களாக ஆசிரியப் பெருந்தகைகள் மதித்துப் போற்றி வணங்கப்பட்டார்கள்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப கல்வியைக் கற்பதிலே கருத்துள்ள மாணவர்களும் கற்பிக்கின்ற ஆசான்களும் கருத்துள்ளவர்களாகச் செயற்பட்டார்கள். பாடசாலைக் காலம் எனபது வாழ்விலே மறக்க முடியாத மகிழ்ச்சி நிறைந்த காலமாகும். குட்டு வாங்கினாலும், அடிவாங்கினாலும், கிள்ளு வாங்கினாலும் அந்தக்குறிப்பிட்ட ஆசிரியரினாலே நானும் கற்று உயர்நிலை அடைந்துள்ளேன் என்று தண்டனைகளை மனங்கொள்ளாமல் அந்த ஆசானைப் பற்றிப் பெருமையாகக் கூறுகின்ற மாணவர்களாக முன்னைய மாணவர்கள். தான்கற்ற பாடசாலையும் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் மதித்தார்கள் என்பதை, எம்மத்தியில் கற்று உயர்ந்த மக்களையும் சிறப்பாகப்புலம்பெயர் நாடுகளில் இருந்து எம் மண்ணுக்கு வந்து செல்லும் மக்கள் செய்யும் உதவிகளையும் மதிக்கும் பண்பையும் கல்வி அன்னைக்கு அவர்கள்காட்டும் நன்றிக் கடனாகவே சமூகம் பார்க்கின்றது

கற்றதினால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாழ் தொழ அர் எனின் கற்றறிவதாவது வாலறிவனாகிய இறைவனின் பாதங்களைத் தொழுதாலும் நூலறிவணாகிய ஆசான்களின் பாதங்களைத் தொழுது உயர்சிறப்புப் பண்பாளர்களாக அந்தக் கால மாணவர் விளங்கினார்கள். அதனாலே, முன்னைய காலங்களில் அரச நிர்வாக இயந்திரத்தையே இயக்குகின்ற உயர் நிலை, மூத்த நிலை, தலைமை நிர்வாகிகளாக தமிழர்களே இருந்திருக்கின்றார்கள். ஆசிரியர்கள் தம் மாணவர்களின் உயர்வு எண்ணி பெருமையடைந்த காலங்கள் கடந்து சென்றாலும், மீண்டும் எம் மாணவர்கள் அறிவும், ஆற்றலும் பண்பாடும் பெற்றவர்களாக வருவார்கள், வர வேண்டும் என்ற அவலுடன் இன்றை காலச்சூழலின் அடிப்படையில் மாணவர்களை நல்ல வழிப்படுத்தி, நாளைய சமுதாயத்தின் நன்முதலீடுகளாக அவர்களை உருவாக்க பெற்றோர் ஆசிரியர் கூட்டுப் பொறுப்பாக வழி காட்டல்களைச் செய்ய வேண்டும். ஆற்றலுள்ள ஆசிரியரும் மதிப்பளிக்காத மாணவர்களைப் புறக்கணிக்கும் நிலைகள் தற்கால ஆசிரியர் மாணவர்களின் முரண்பாடுகளால் ஏற்படுகின்றன. இந்த முரண்பாடுகளால் எதிர் காலத்தை இழப்பவர்கள் மாணவர்களே.

இந்தக் காலப் பெற்றோர்கள் பலர் தம் பிள்ளைகளுக்கு கஷ்டம் தெரியாமல் வளர்க்கின்றார்கள். இதனாலே அவர்கள் பொறுப்புணர்வற்றவர்களாக பல பிழையான வழிகளைப் பின்பற்றி சமூகச் சிரழிவை ஏற்படுத்துகின்ற போதை, மது, புகைத்தல், காம உணர்வுகளைத் தூண்டும் இணையவலைப் பின்னல்களுக்குள் அகப்பட்டு, வன்முறைகளில் ஈடுபட அவர்கள் முயல்வதனால் கல்வி கற்க நாட்டம் அற்றவர்களாக மற்றவர்களை மதிக்காத நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இதனாலே இப்படியான ஒருசில மாணவர்களால் ஒட்டுமொத்த மாணவர்களும் பிழயானவர்கள் என்று குற்றஞ் சுமத்தவும், சமுகத்திலே முரண்பாடுகளைத் தூபமிடும் கூட்டங்களும் அலைந்து திரிகின்றன. இவர்களின் வஞ்சக வலையில் எம் வருங்கால மாணவர் சமூதாயத்தைச் சிக்கவைக்காமல், சமூக நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் பெற்றோருடன் அதிசிரத்தையும் தம்பிள்ளைகளைப் பொறுப்புணர்வுடன் அவர்கள் கல்வியைத் தொடர, அன்போடும், அக் கறையோடும் வழிப்படுத்துங்கள், ஆலயங்கள் ஆன்மிகச் செயற்பாடுகளுக்கு அவர் களையும் அழைத்துச் சென்றும், குடும்ப உறவையும் பலமாக்குங்கள். சமூகப் பண்பாடு கலாசாரங்களை வெளிப்படுத்தும் சுப, துக்க நிகழ்வுகளுக்கும் குடும்பமாகச்சென்று, குடும்ப உணர்வுகளை அவர்களுக்கு ஊட்டும் போது, பிள்ளைகள் எம்மை விட்டுப் பிழையான வழிகளை நாடமாட்டார்கள், இடைக்கால விலகல்களே இடைவெளியை உண்டுபண்ணியுள்ளன. நாளைய சமுதாயச் சிற்பிகளை உருவாக்கும் பாடசாலைகளை, எம் முதுசங்களாக மதிப்போம்.



*கட்டுரையாளர்:*
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்றால் முடியாதது எதுவுமில்லை

ராமுவும் சேகரும் இணைபிரியாத நண்பர்கள். ராமுவுக்குக் கண் தெரியாது. அதேபோல் சேகரால் நடக்க முடியாது. இதனிடை இருவருக்கும், தாய், தந்தையர், சுற்றத்தவர்கள் கிடையாது. இருவரும் பெரியவர்களிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் வாழ்ந்து வந்த கிராமத்தில் கிடைக்கின்ற இலகுவான வேலைகளைச் செய்து கொண்டு கிராமத்தில் உள்ளோர் அன்போடு பரிமாறுகின்ற உணவுகளையும் உண்டு வாழ்ந்து வந்தனர்.



இந்த நிலையிலே அயலூரில் நடக்கும் திருவிழா பற்றித் தெரிய வந்தது. இறை பக்தியும் கலைகள் மீதான ஆர்வமும் இயல்பாக இருவருக்கும் இருந்த காரணத்தால் அங்கே போக வேண்டும் என்ற உந்துதல் மனதுள் எழுந்தது. அங்கே செல்ல முடிவெடுத்தார்கள். ஆனால், அயலூரை மிக விரைவாக அடைந்து விட முடியாது. நீண்ட நேரம் நடக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே சேகருக்கு இந்த விடயம் சோர்வையும் சலிப்பையும் தந்தன. ராமுவை அழைத்து என்னாலோ நடக்க முடியாது. உன்னாலோ பார்க்க முடியாது. இந்த இலட்சணத்தில் நமக்கு ஏன் இந்த விபரீத ஆசை..? என்று சொன்னான்.

சேகர் சொன்னவற்றைச் செவிமடுத்த ராமு சிறிது நேரம் தீவிரமாக யோசித்து விட்டுச் சொன்னான்: நண்பா..! நீ ஒருவிடயத்தை சற்றே சிந்தித்துப் பார். உன்னால் நடக்கத்தான் முடியாது.. ஆனால் கூர்மையாகப் பார்க்க முடியுமல்லவா...! அதேபோன்று என்னால் பார்க்கத்தான் முடியாது..! ஆனால் வெகுதூரம் நிதானமாக நடக்க முடியும்..! ஆகவே, நீ என் தோள் மீது ஏறி உட்கார்ந்து கொள். எனக்கு வழி காட்டு. போக வேண்டிய பாதையைச் சொல்லிக் கொண்டேவா. நாம் இருவரும் திருவிழாவுக்குச் சென்று வரமுடியும்–என்றான்.

சேகரும் முழு மனதோடு ராமு சொன்னவற்றை ஏற்றுக்கொண்டான். ஒற்றுமையோடு முயற்சித்தார்கள். திருவிழாவுக்குச் சென்று வந்தார்கள்...!

ஆக குழந்தைகளே நம்முடைய பலம் எது என்பதை எப்பொழுதும் உணர்ந்திருப்பது அவசியம். அதைத் தகுந்த சமயத்தில் உபயோகிக்கத் தெரிய வேண்டியதும் அவசியம். அதே போன்று ஏன் நம்மால் ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது என்று யோசித்திருப்பதை விட, எப்படி அந்தக் காரியத்தை இலகுவாகச் சாதிக்க முடியும் என்று யோசிப்பது அதிக பயனையும் முயற்சிக்கான தூண்டுதலையும் தரும். இவைதவிர மிகப் பிரதானமாக அடுத்தவர்களுடைய பலம் நமக்குப் பயன் தர வேண்டுமானால், அவர்களுக்குத் தேவையான அதுசார்ந்த பயன்களை அவர்களுக்கு மனமுவந்து கொடுத்திட வேண்டும்...! உதவிகளைச் செய்யத் தயங்கியிருக் கக்கூடாது...! முயன்றால் முடியாதது எதுவுமில்லை எதனையும் நேர் சிந்தனையோடு பயணித்துச் சாதிக்க முடியும்...! இதைப் புரிந்து கொள்ள வேண்டும்....!

# பொது அறிவு


1. வருடந்தோறும் ஒக்ரோபர் முதலாம் திகதி எத்தினமாகக் கொண்டாடப்படுகிறது?
   உலக சிறுவர் தினம்
   உலக முதியோர் தினம்
   உலக மரக்கறிகள் தினம்
2. வருடந்தோறும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி எத்தினமாகக் கொண்டாடப்படுகிறது?
   உலக முதலுதவி தினமாக
3. பூச்சிகளுள் தூரப் பார்வை உடைய சிறப்பான பூச்சி எது?
   வண்ணத்துப் பூச்சி
4. மனிதனுக்கும் பூனைக்குமுள்ள எலும்புகள் எத்தனை?
   மனிதன் - 206 எலும்புகள்
   பூனை - 250 எலும்புகள்
5. பழங்களில் அதிகளவு குளுக்கோஸ் உள்ள பழம் எது?
   திராட்சைப் பழம்
6. 'பட்டாம் பூச்சிகளின்' சரணாலயம் என அழைக்கப்படும் நாடு எது?
   மெக்ஸிக்கோ
7. உலகில் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு எது?
   இந்தியா
8. வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி எத்தினமாகக் கொண்டாப்படுகிறது
   உலக கை கழுவுதல் தினம்
9. மகாகவி பாரதியார் ஆரம்பித்த பத்திரிகையின் பெயர் எது?
   இந்தியா
10. அன்னாசிப் பழத்தின் தாயகம் எது?
   பிரேசில்

# வரலாற்றில் இன்றைய தினம்

1760 - மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் அரசரானார்.
1920 - இங்கிலாந்து பிறிக்ஸ்ரன் சிறைச்சாலையில் 74 நாள்கள் உணவு தவிர்ப்பின் பின்னர் ரெறன்ஸ் மக்ஸ்வினி சாவடைந்தார்.
1927 - இத்தாலிய ஆடம்பரப் பயணிகள் கப்பல் SS பிறின்ஸி பெஸ்ஸா மபல்டா பிரேஸில் கரைக்கு அப்பால் கடலில் மூழ்கியதில் 314 பேர் உயிரிழந்தனர்.
1940 - அமெரிக்க இராணுவத்தில் முதல் ஆபிரிக்க - அமெரிக்க ஜெனரலானார் பென்ஜமின் டேவிஸ்.
1944 - நாஸி ஹங்கேரிய ஆக்கிரமிப்பிலிருந்து, ரோமானிய நகரான கரேய், ரோமானிய மற்றும் ரஷ்ய படைகளால் விடுவிக்கப்பட்டது.
1945 - ஜப்பான் கூட்டுப்படைகளிடம் சரணடைந்ததையடுத்து, தாய்வானின் நிர்வாகத்தை, சீனக்குடியரசு கையேற்றது.
1962 - உகண்டா ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.
1983 - புரட்சிச் சதியொன்றில் கிரெனடா பிரதமர் மொறிஸ் பிஷப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பலரும் கொல்லப்பட்டு, ஆறுநாள்களின் பின்னர், அமெரிக்கா மற்றும் அதன் கரிபியன் கூட்டுப்படை கிரெனடாவுக்குள் நுழைந்தது.
1992 - குடாநாட்டில் வாந்திபேதி யாழ். மருத்துவமனையில் 2 குழந்தைகள் சாவு.
 - எல்லைப்புறப் பாதுகாப்பு விசேட பொலிஸ் அதிகாரிகள் பதவி உயர்வுடன் நியமிப்பு.
2004 - வெள்ளவத்தையில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை. மற்றொருவர் அபாய கட்டத்தில்
 - பலாலி விவசாய நிலங்கள் பற்றி விளக்கம் கோருகிறது உயர் நீதிமன்றம்.
2007 - தமிழருக்காகக் குரல் எழுப்புவது இராஜ துரோகக் குற்றமாயின் விளைவுகளை ஏற்கத் தயாரென பிரதம நீதியரசருக்குக் கூட்டமைப்பு பதில்.
 - நிறைமாதக் கர்ப்பிணி உட்பட நாலு பேர் மன்னாரில் ஷெல் தாக்குதலில் உயிரிழப்பு.
2009 - ஒக்ரோபர் 2009 பாக்தாத் குண்டுத் தாக்குதலில், 155 பேர் உயிரிழந்ததுடன், 721 பேர் காயமடைந்தனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். உடல்நலம் சீராகும்.

**இடபம்:** மனதில் உதித்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான பணிபுரிவீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** சிறிய பணி கூட நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். சுமாரான அளவில் வருமானம் கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**கடகம்:** செயலில் புதிய உற்சாகம் பிறக்கும். தாமதமான பணி கூட நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரர் விருப்பத்தை முழுமை செய்வீர்கள்.

**சிங்கம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் குடும்பத் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவர்.

**கன்னி:** குடும்ப பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் விற்பனை விடயத்தில் புதிய சாதனை உருவாகும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்த்து படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க விடா முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை அளிக்கும்.

**தனுசு:** அன்றாடப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**மகரம்:** முக்கிய செயலை மதிநுட்பத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். புதிய சொத்தும் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெண்கள் ஆடம்பர பொருள் வாங்குவர்.

**கும்பம்:** இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** எதிலும் பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

இறங்கும்போது நமக்கு வேண்டாத வரையும் பார்க்க விரும்புகிறோம்... இருக்கும் போது நமக்கு வேண்டியவர்களையும் பார்க்க மறுக்கிறோம்...!!



## மேடையிலேயே உயிர் பிரிந்த நடிகை

பிரபல மராத்தி நடிகையும் பரதநாட்டிய நடனக் கலைஞருமான அஸ்வினி ஏக்போத் (வயது -44)கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றில் நடனமாடி கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக மேடையிலேயே விழுந்து உயிரிழந்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு புனேவில் நடந்த பரத நாட்டிய நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அஸ்வினி அபாரமாக நடனம் ஆடிக்கொண்டிருந்தபோது, திடீரென மேடையில் சரிந்து விழுந்தார், உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என, ஆனால் அவருடைய உயிர் மாரடைப்பு காரணமாக ஏற்கனவே பிரிந்து விட்டது என மருத்துவர்கள் கூறினர்.

பரத நாட்டியத்தை உயிருக்கு நிகராக மதித்து வாழ்ந்து வந்த அஸ்வினி பரத நாட்டிய நிகழ்ச்சியின்போதே உயிரை விட்ட சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி யுள்ளது எனச் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"தீபாவளி தள்ளுபடி விற்பனையில உங்க மனைவிக்கு ஏதாவது வாங்கி கொடுத்தீங்களா...?"
"மிக்ஸி வாங்கினேன்..."
"உங்களுக்குச் சரி, உங்க மனைவிக்கு எதுவும் வாங்கிக் கொடுக்கலையா...?"




## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 9 | 2 | 3 | 4 | 7 | 6 |
| 2 | 7 | 9 | 6 | 8 | 4 | 3 | 5 | 1 |
| 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 | 8 | 9 |
| 6 | 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 9 | 5 |
| 5 | 3 | 1 | 7 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 5 | 6 | 1 | 3 | 2 |
| 7 | 1 | 6 | 3 | 4 | 5 | 9 | 2 | 8 |
| 3 | 4 | 8 | 2 | 6 | 9 | 5 | 1 | 7 |
| 9 | 5 | 2 | 8 | 1 | 7 | 6 | 4 | 3 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 8 | | | | |
| | | 4 | 7 | | | | | |
| 3 | | 8 | 5 | | | | | |
| | | 5 | | | 2 | | | 4 |
| 8 | | 9 | 6 | | | | | 2 |
| | 4 | | | 3 | | | | |
| | 8 | 1 | | | | | | 9 |
| | 2 | 3 | | 9 | | 6 | | |
| | | 7 | | | | 8 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

வதந்தியைக் கிளப்பாதீங்கனு பொலிஸ் சொல்லிட்டு இருந்த நேரத்துல...




பக்கத்து வீட்டுல இருந்த வசந்தியை எவனோ கிளப்பிகிட்டு போய்ட்டான்... பாவிப் பையன்...

எல்லா வகை குழம்பும் கிடைக்கும் என்று போர்டு வைச்சது தப்பாப் போச்சு முதலாளி...!
ஏன்.... என்ன ஆச்சு?



ஒரு ஆளு வந்து எரிமலைக் குழம்பு வேணும் என்று கேட்டு அடம்பிடிக்கிறார்...

இந்தாடா தம்பி 500 ரூபா போய் கரண்ட் பில் கட்டிட்டு மீதிய செலவுக்கு வச்சுக்க...



ஆவலா வாங்கிட்டு போய் கட்டினா, கரண்ட் பில் ரூ 499.70 இதான்டா ஒரிஜினல் அம்மா கணக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல நோய்களுக்கு மருந்தாகும் ஏலக்காய்



சுயிங்கம், சொக்லெட் என எதையாவது வாயில் போட்டு அசை போடுவதால் எந்தப் பயனும் இல்லை. அதற்குப் பதிலாக ஏலக்காயை வாயில் போட்டு மென்று சாப்பிடுங்கள். அது நல்ல பயனைத் தரும்.

இதில் உள்ள காரக்குணம் வயிற்றுப் பொருமலைக் குணமாக்கி எளிதில் செரிமானம் ஆகும்படி தூண்டுகிறது.

பசியே ஏற்படுவதில்லை, சாப்பிட பிடிக்கவில்லை என்று கூறுபவர்கள், தினமும் ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்றால், பசி எடுக்கும். ஜீரண உறுப்புகள் சீராக இயங்கும்.

நெஞ்சில் சளி கட்டிக் கொண்டு மூச்சு விட சிரமப்படுபவர்களும், சளியால் இருமல் வந்து, அடிக்கடி இருமி வயிற்றுவலி வந்தவர்களுக்கும்கூட ஏலக்காய் நல்ல மருந்தாக அமையும். ஏலக்காயை மென்று சாப்பிட்டாலே, தொடர் இருமல் குறையும்.

வாய் துர்நாற்றம் ஏற்படுவதற்கும் சமிபாட்டு உறுப்புக்களில் ஏற்படும் பிரச்சினைதான் காரணம். எனவே வாய் துர்நாற்றத்தைப் போக்க ஏலக்காயை மென்று சாப்பிட்டு வரலாம்.

சாப்பிடும் உணவு வகைகளில் சிறிது ஏலக்காயைச் சேர்த்துக் கொள்வது நல்லது. அதிகமாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 400 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 500 | 390 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 700 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 500 | 300 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 500 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 350 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 300 | 300 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 200 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 300 | – |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 80 | 200 |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 300 | – |




ராஜஸ்தான் ஷோலிகிட்கள் அறிமுகமாகியுள்ளன. முன்பக்க வெட்டு வடிவமைப்பில் நெற்றில் வடிவமைக்கப்பட்டுள்ளன. நீளமான மேற் சட்டடையும், நீளமான பாவாடையுமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எம்பிரோயிடிங் வேலைப்பாட்டுடன், கண்ணாடிகள் பதித்து இவை உருவாக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## எள்ளுச் சம்பல்

தேவையான பொருள்கள்

எள்ளு – 4 மேசைக்கரண்டி
தேங்காய் – ஒரு மூடி
மிளகாய் வற்றல் – 5
புளி – தேவையான அளவு
உப்பு – 2 தேக்கரண்டி

### செய்முறை

எள்ளை நன்றாக சுத்தம் செய்து எடுத்துக்கொள்ளவும். தேங்காயைத் துருவிக்கொள்ளவும். வெறும் சட்டியை அடுப்பில் வைத்து காய்ந்ததும் எள்ளை கொஞ்சமாய் போட்டு பொரித்து எடுக்கவும். பிறகு அத்துடன் தேங்காய் துருவல், மிளகாய் வற்றல், உப்பு, புளி எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து தாளித்துக் கொள்ளவும். எள்ளுச் சம்பல் தயார்.





## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 40 | 50–120 | 60 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 60 | 140 | 80 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 200 | 120 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 110 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 60 | 60 | 60 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 70 | 80 | 80 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 120 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 45 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 500 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 140 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 60 | 80 | 80 | 200 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு அடைப்புப் போராட்டத்துக்கு அனைவரும் முழு ஆதரவு தருக

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வேண்டுகோள்

வவுனியா, ஒக். 25

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கொலைக்கு நீதிவேண்டி வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட விருக்கும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டதாவது:

யாழ். பல்கலைக்கழக மாணவர்களான பவுண்ராஜ் சுலக்ஷன் மற்றும் நடராஜா கஜன் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். அவர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றே கூறப்படுகின்றது. இறந்த அந்த இளைஞர்களுக்கு அனுதாபம் தெரி வித்தும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்களுக்கு எதிராக நீதியான விசாரணையை வலியுறுத்தியும் வடக்கு மாகாணம் முழுவதும் இன்று ஒருநாள் அடையாள முழு அடைப்பு (ஹர்த்தால்) நடத்துவதற்கு யாழ்ப் பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அதற்கு முழு ஆதரவைத் தெரிவிப்பது எமது தார்மீகக் கடமையாகும். நீதிக்கான கோரிக்கைக்கு எமது ஆத ரவைத் தெரிவித்து இன்று அனைத்து நடவடிக்கைகளை யும் தவிர்த்து இறந்த ஆத்மாக்களுக்கு அமைதி வேண்டியும் நீதி வேண்டியும் பிரார்த்திப்போம்.

இந்தப் போராட்டத்தில் அரசின் அனைத்துத் திணைக் களங்களைச் சேர்ந்த ஊழியர்களும், கல்விச் சமூகத்தி னரும், தனியார் மற்றும் அரச போக்குவரத்து ஊழியர்க ளும், முச்சக்கர வாகன ஊழியர் மற்றும் உரிமையாளர் சங்கங்களும், அனைத்துப் பொது அமைப்புக்களும், சிவில் அமைப்புக்களும், தொழிற்சங்கங்களும், பொது மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்- என்றுள்ளது.

(ற-4)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சுலக்சனின் இறுதிக் கிரியைகளிலும் பெரும் எண்ணிக் கையானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களும், பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் இணைந்து யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட் டத்தை நடத்தி னர். சுமார் ஒன்றரை மணி நேரம் ஏ-9 தேசிய நெடுஞ்சாலையை மறித்தும் போராட்டம் நடத்தப் பட்டது. ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

**கிளிநொச்சி**

பாடசாலை மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பொது அமைப்புக்கள் இணைந்து போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தன. கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பித்து, மாவட் டச் செயலகம் வரை ஊர்வலம் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக் கானவர்கள் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு முன்பாக நின்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

**வவுனியா**

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வவு னியா வளாக மாணவர்கள், தமது வளாகத்தினுள்ளேயே நின்று யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

**மட்டக்களப்பு**

கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று சுமார் ஒரு மணி நேரம் போராட் டம் நடத்தினர். இதில் மூவின மாணவர்களும் கலந்து கொண்டனர். மாணவர்கள் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

**கண்டி**

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் களும், யாழ்;. பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர். இன வாதத்தை தூண்ட முயற்சிக்கும் அர சின் முயற்சிக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பினர்.

**கொழும்பு**

கொழும்பில் நேற்று இரண்டு கவனயீர்ப்புப் போராட்டங் கள் நடத்தப்பட்டன. அனைத் துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவன வீர்ப்புப் போராட்டம், நேற்று மதியம் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு, கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் சிங்கள முற்போக்குத் தலைவர் களான விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜெயசூரிய போன்றவர்களும் கலந்து கொண்டனர்.

**சென்னை**

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு மே 17 இயக்கத்தி னர் போராட்டம் நடத்தினர். மாணவர் படு கொலைக்கு பன்னாட்டு விசாரணையே தேவை என்று அவர்கள் வலியுறுத்தினர்.

(உ-5)

## 14 இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


உத்தரவிட்டது.

1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாத காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இருவர் காணாமற்போகச் செய்யப் பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அக்காலப் பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமை யாற்றிய லெப்ரினன்ட் வீரசிங்க உட்பட 14 இராணுவத்தி னர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து யாழ்.நீதிமன்றினால் 14 இராணுவத்தினருக்கும் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் முதலில் 5 இராணுவத் தினரும் பின்னர் 9 இராணுவத்தினரும் நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று கடந்த தவணை உத்தரவிட்டி ருந்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 14 இராணுவத்தினரும் மன்றில் முன்னிலை யாகியிருந்தனர். அதன்போதே அவர்களின் மறியல் நீடிக்கப்பட்டது.

(வ-4,106)

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை வேல்முருகு

(ஓய்வுநிலை - வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களம்)

**பிறப்பு** 14.12.1939 — **இறப்பு** 22.10.2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கித்துள் வீதி, குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை வேல் முருகு 22.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நித்தியகல்யாணியின் அன்புக் கணவரும் சிவானந்தன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), பத்மராணி, ஆனந்தராசா (யா/கட்டடங்கள் திணைக் களம்), வசந்தி, நிர்மலா, சுகந்தி (லண்டன்), நந்தகுமார்(யா/சிறிலங்கா இஞ்சூரன்ஸ்), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தை யாரும் சிவசாந்தினி, யோகநாதன், றஞ்சினி (பிரதேச செயலகம் - நல்லூர்), பகீரதன், விமல்ராஜ்(இலங்கை போக்குவரத்து சபை), மகேந்திரராஜா (லண்டன்), சத்தியா(யா/சிறிலங்கா இன்சூரன்ஸ்), இராஜநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கோபிநாத் (லண்டன்), ரகுநாத்(மொறட்டுவ பல்கலைக்கழகம்), லக்சன், கிருஜன், டினுஜன், கஜன், துவாரகா, விஜயகுகன்(பிரதேச செயலகம் - நெடுங்கேணி), யசோக்குமார்(பொலிஸ் திணைக்களம் - களுத்துறை), விதுசன், கபிலன், சாயிசன், சாயிமிகுந்தன், மிதுலன், திவ்யா ஆகியோரின் பேரனும் பரமகல்யாணி, காலஞ்சென்ற மகாதேவன், இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.10.2016) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூந்தோட்ட இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கித்துள் வீதி, குடியிருப்பு, வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.

(V-129)(14.17)

**075 044 2126**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இரத்தினம்மா செல்வரெத்தினம்

18, கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம்மா செல்வரெத்தினம் நேற்று (24.10.2016) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் A.J. செல்வரெத்தினத்தின் அன்பு மனைவியும், பேனாட், பரிங்டன் ஆகியோரின் அன்புத் தாயும், நேசவதனி, திவ்யரஜனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (26.10.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

திரு.A.J. செல்வரெத்தினம் (கணவர்)

**021 222 2429/ 077 785 5022**

(ஜே.5642) (13.18.17.21)



### திருமதி ஞானமுத்து சண்முகம்

**தோற்றம்** 1938.07.31 — **மறைவு** 2016.10.23

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவு[ம்] கொண்ட திருமதி ஞானமுத்து சண்முகம் 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் (பிரப[ல] வர்த்தகர் - ஆலியெல) அன்பு மனைவியும் காலஞ்சென்[ற] வர்களான சீனித்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்[பு] மகளும் ரத்தினம்மா, நர்ராஜா, தங்கராசா, விவேகானந்த[ன்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் நேசராணி, புஸ்பரா[ணி] (பிரான்ஸ்), இந்துராணி(பிரான்ஸ்), ஜெயராணி (ல[ண்] டன்), பத்மராணி மற்றும் சக்திதாசன்(லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் கணேசலிங்கம் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ்.பல்கலைக்கழகம்) அருணகிரிநாதர் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களா[ன] சிவசுப்பிரமணியம், சுத்தானந்தன் மற்றும் ரவிச்சந்திர[ன்] பிரகலா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரு[ம்] அருளரசன், அருள்பிரியன்(பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்) அருள்மைந்தன், சுஜா[ன்] (பிரான்ஸ்), சுஜிதா(பிரான்ஸ்), வினுசன்(பிரான்ஸ்) சுவேதா (பிரான்ஸ்), அக்சயன்(பிரான்ஸ்), திலக்ஷ[ன்] (லண்டன்), ஆதுஷா (லண்டன்), சிவதர்சன், றஜீவ[ன்] கபிலன், சிவதரணிகா (அரணியா), அர்ச்சனா, அர்தி[ன்] அர்வினி(லண்டன்) ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவ[ரது] இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கா[க] குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்து[ச்] செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

குப்பிளான். — குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## மின்கலங்களில் நூற்றுக்கணக்கான நச்சு வாயுக்கள்

மின்னேற்றம் செய்து பயன்படுத்துகின்ற அன்றாட மின் உபயோக சாதனங்களின் பற்றறிகள் நூற்றுக்கும் மேற்பட்ட விச வாயுக்களை வெளியேற்றுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மிகப் பிரதானமாக நாம் அதிகம் பயன்படுத்தக்கூடிய அதிதிறன் பேசிகள், கைக் கணினிகளில் உள்ள மின்கலங்களே இவ்வாறான தன்மையைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



ஆய்வின் படி மின்கலங்களில் இருந்து வெளியேறுகின்ற நச்சு வாயுக்கள் தோலில் அரிப்பு, கண்களில் பாதிப்பு மற்றும் சுவாசக் கோளாறுகள் போன்றவற்றை ஏற்படுத்துவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மின்கலங்களினுள் காணப்படுகின்ற லித்தியம் மற்றும் கார்பன் மோனாக்சைட் போன்றவற்றினால் இந்த நச்சு வாயுக்கள் வெளியேறுவதாக அமெரிக்காவின் என்.பி.சி. டிவென்ஸ் மற்றும் சீனாவின் ரி சிங்குவா பல்கலைக்கழகத்தின் நிபுணத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி கைபேசிகளைப் பயன்படுத்துவோரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இந்த நச்சு வாயுக்கள் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதோடு சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் ஏற்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இவை வெப்பமடையும் போதும், சேதமடைந்த அல்லது நீண்டகாலங்கள் பயன்படுத்தப்பட்ட மின்கலங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தும் போதும் இந்த நச்சுவாயுக்கள் வெளியேறுவது தெரியவந்துள்ளது.

பொதுவாக 50 சதவீகிதம் மின்னேற்றம் செய்யப்பட்ட பின்னர் நச்சு வாயுக்கள் வெளியேறுவதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## சர்வதேச ரோபோ மாநாடு பிஜிங்கில்



நடப்பாண்டிற்கான சர்வதேச ரோபோ மாநாடு இம்முறை பிஜிங்கில் இடம்பெற்றுவருகின்றன. மாநாட்டின் முக்கிய அங்கத்தவர்களாக உலகின் தொழில்நுட்ப மேம்பாட்டின் முன்னணி நாடுகள் கலந்துகொண்டுள்ளன.

முக்கியமாக அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான், தென்கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகியன இடம்பிடித்துள்ளன.

அண்மைய தொழில்நுட்பத் திறன் கண்டறிவுகளை உள்ளடக்கிய ஆய்வு முன்னிலைகள் அதுசார்ந்த விடயதானங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

குறிப்பாக குகா ரெத்திங் ரெபோட்டிக்ஸ் மற்றும் சீன சின் சோங் ரோபோக்கள் மாநாட்டின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் 10 நாடுகளைச் சேர்ந்த 500 குழுக்கள் கலந்துகொண்டுள்ள மேற்படி ரோபோக் கண்காட்சி நிகழ்வில் அதிகளவானவர்கள் கலந்துகொண்டுள்ளனர். மனித இயக்கங்களை ஒத்த ரோபோக்கள், பட்மின்டன் விளையாட்டில் ஈடுபடும் ரோபோக்கள் உலகத்தவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன.

# சிறந்த விவசாயிக்கு டவே ட்ராக்டர்



இலங்கை மகாவலி அதிகார சபை ஏற்பாடு செய்த மகாவலி வலயத்தின் சிறந்த விவசாயி மற்றும் சிறந்த விவசாய அமைப்பைத் தேர்ந்தெடுக்கும் போட்டியில் வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கோலாகலமாக அண்மையில் நடைபெற்றது.

எம்பிலிபிட்டி, மகாவலி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கலந்துகொண்டதுடன் சிறந்த விவசாயியாக உருலுவெள வலயத்தின் கல்கிரியாகம, தம்பேவட்டன பகுதியைச் சேர்ந்த ஆர்.பி. பிரேமதாச தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு பிறவுண்ஸ் நிறுவனமும் எல்.ஓ.எல்.சி. மைக்றோ கிரடிட் நிறுவனமும் இணைந்து புத்தம் புதிய பிறவுண்ஸ் டவே ட்ராக்டர் ஒன்றைப் பரிசளித்திருந்தன.

அதியுயர் தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கை விவசாயிகளின் தேவைக்குப் பொருந்தும் வகையில் உற்பத்தி செய்யப்பட்ட டவே ட்ராக்டர், பிறவுண்ஸ் விவசாயபிரிவால் விநியோகிக்கப்படும் முதல்தர டிரக்டராகும்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிறவுண்ஸ் விவசாயப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் சஞ்சய நிங்க பிறவுன்ஸ் விவசாயப் பிரிவு ஆரம்பம் முதலே விவசாய உபகரணங்கள் ஊடாக இலங்கையிலுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நிறுவனமாகும்.

நாட்டுக்கே சோறு வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படும் விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவப்படுத்த மகாவலி அதிகார சபை எடுத்த முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கக் கிடைத்தமை எமக்கு சந்தோசமான விடயமாகும். நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக இலங்கையின் விவசாயத்துடன் இணைந்த நாம், உள்ளூர் விவசாயிகளின் மேம்பாட்டுக்கு உதவக் கிடைத்தமையானது எமக்குப் பெருமையான விடயமாகும் எனக் கூறினார்.

மகாவலியின் சிறந்த விவசாயி மற்றும் சிறந்த விவசாய அமைப்பு ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கும் போட்டியின் முக்கிய நோக்கமாக இந்த நிலப்பரப்பின் அண்மித்த பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபடும் ஒரு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகளை மேம்படுத்துவதைக் கொண்டு அமைந்துள்ளது. (தி)

வணிகம்

## ஒரு லட்சம் வங்கிக் கணக்கு திறக்கும் இலங்கை வங்கியின் புதிய திட்டம்

நாடு தழுவிய ரீதியில் ஒரு லட்சம் வங்கிக் கணக்குகள் திறக்கப்படவுள்ளன.

எனவே நேற்று முதல் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கை வங்கியில் கணக்கு இல்லாதோர் புதிய கணக்கை ஆரம்பித்து வங்கி நடவடிக்கையில் ஈடுபடலாம். இவ்வாறு வட்டுக்கோட்டை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் வி.புவனேந்திரராஜா தெரிவித்தார்.

ஒரு லட்சம் வங்கிக் கணக்குகளைத் திறக்கும் நடைமுறை குறித்தும் வலி.மேற்குப் பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்குக் கடந்த வாரம் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை வங்கி முகாமையாளர் வி.புவனேந்திராராஜா மேலும் தெரிவிக்கையில், நாடு தழுவிய ரீதியில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. இதன் ஆரம்ப வைப்பு நிதியை இலங்கை வங்கி வழங்கும்.

எனவே முதல் வருபவர் இந்த நன்மையை அடையலாம் - என்றார். (த-50)

## இலங்கை வங்கி செயற்படுத்தும் சிறுவருக்கான முதலீட்டுத் திட்டம்

இலங்கை வங்கியினர் பவர் பிளஸ்என்னும் மாதாந்தம்பணம் செலுத்தக்கூடிய வகையிலான சிறுவர் முதலீட்டுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தில் 5 லட்சம் ரூபா தொடக்கம் 50 லட்சம் ரூபா வரையான தொகைக்கு மாதாந்தம் கட்டணம் செலுத்த முடியும். முதலீட்டுக் காலப் பகுதியில் வைப்புத் தொகைக்கு 8 வீத வட்டி வழங்கப்படும்.

வாடிக்கையாளரால் செலுத்தக்கூடிய மாதாந்த வைப்புத் தொகைக்கமைய முதலீட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்யலாம்.

பிள்ளைக்கு 18 வயது நிரம்பிய பின்னர் எதிர்பார்த்ததைப் போன்று உயர் வருமானங்களைப் பெற்றுக் கொள்ளலாம். குழந்தைக்குப் பதிலாக பெற்றோர், பாதுகாவலர் அல்லது வேறெந்த நபரும் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

ஒவ்வொரு மாதத்திலும் கணக்கு ஆரம் பிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக மாதாந்த வைப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆகக்கூடியது 6 மாதங்களுக்கு ஒழுங்கற்ற விதத்தில் வைப்புகள் மேற்கொள்ளப்பட்டால் முதலீட்டுத் திட்டம் செல்லுபடியற்றதாக்கப்பட்டு நிலுவையிலுள்ள தொகை குழந்தையின் பெயரில் ரண் கெகுளு கணக்கொன்றில் வைப்புச் செய்யப்படும். முதலீட்டுத் திட்டம் முதிர்வின் பின்னர் மீண்டும் நீடிக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

# உள்நாட்டுச் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசு திட்டம்

உள்நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நாட்டின் மொத்த சீனித்தேவையின் 50 சதவீதத்தை 2020 இல் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இரு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ள சீனி உற்பத்தி மேம்படுத்தல் செயற்பாடுகளில் முதல் கட்டத்தில் நீண்ட கால அடிப்படையிலான நடவடிக்கைகளும், இரண்டாம் கட்டத்தில் நடுத்தரவளவு கால அடிப்படையிலான நடவடிக்கைகளும் உள்ளடங்கியுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதுடன், கரும்புச்செய்கையை மேம்படுத்துவதற்கும் 15 புதிய சீனித்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

1950ஆம் ஆண்டளவில் இலங்கையில் சீனி உற்பத்தி வியாபார மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், கரும்புச்செய்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டதன் காரணமாக இந்தத் துறை பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

தற்போது நாட்டின் வருடாந்த சராசரி சீனித்தேவை 700,000 மெட்ரிக்தொன்களாக அமைந்துள்ளதுடன், உள்நாட்டு உற்பத்தி வருடாந்தம் 56,000 மெட்ரிக் தொன்களாக அமைந்துள்ளது. இலங்கையின் மொத்தத் தேவையில் எட்டு சதவீதத்தை மட்டுமே உள்நாட்டு உற்பத்தி நிவர்த்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி....

வைக்கப்பட்டுள்ள மனுவுக்கு உரிய பதில் கிடைக்கும் வரை, யாழ். பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடமும் காலவரையறை யின்றி இழுத்து மூடப்படும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கந்தசாமி ரஜீவன் தெரிவித்தார்.

மாணவர் படுகொலைக்கு நீதி கோரி, யாழ். மாவட்டச் செயலகம் முன்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு, மாவட்டச் செயலர் மற்றும் ஆளுநரின் செயலர் ஊடாக மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த மனுக் கையளிப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

பல்கலைக் கழக மாணவர்கள் இந்தப் படுகொலையால் கொந்தளிப்புடன் இருக்கின்றார்கள். நீதியான விசாரணை நடக்க வேண்டும் என்பதால் அவர்கள் பொறுமை காத்துக் கொண்டு இருக்கின்றனர். இதனை உரிய தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும். பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். இன்றைய போராட்டத்தில் மாணவர்களையும், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தையும் மாத்திரமே இணைத்துள்ளோம். அரசியல்வாதிகள் எவரையும் உள்வாங்கவில்லை. மாணவர் போராட்டம் மழுங்கடிக்கப்படக் கூடாது.

உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் உறுதி எடுத்துள்ளோம்.

போருக்குப் பின்னரான சூழலில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மாணவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் மன வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டால்தான் மாணவர்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத்திரும்புவதை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைப் பொலிஸார் விபத்து என்று கூறினர். இது மிகப் பெரிய தண்டனைக்குரிய குற்றமாக நாம் கருதுகின்றோம். சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் பக்கச்சார்பின்றி நடைபெறுமா என்ற கேள்வி எம்மிடம் எழுகின்றது.

விசாரணைகள் எவ்வித பக்கச்சார்பற்ற முறையில் நடைபெற வேண்டும் என்ற விருப்பு அதிகாரத்தில் இருப்பவர்களிடம் இல்லாத விடத்து கடந்த காலங்களைப் போன்றே இந்தச் சம்பவத்துக்கும் தீர்வு கிடைக்காமல் போய்விடும். இதற்கு உதாரணமாக எமது புங்குடுதீவு மாணவியின் படுகொலைச் சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், சட்ட பிரதிநிதிகளின் முழுமையான பங்குபற்றலுடன் நீதியான விசாரணை நடைபெறவேண்டும். மாணவர்களைச் சுட்டுக் கொன்றது தொடர்பில் பொலிஸார் ஏன் முதலில் அதை ஒரு வீதி விபத்து என்று தெரிவித்திருந்தனர் என்பதற்குத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உதவியுடன் முழுமையான விசாரணை நடத்தவேண்டும். அது தொடர்பிலான உண்மைகளை வெளிக் கொணர வேண்டும். மனித உரிமை ஆணைக்குழு உள்ளூர்மனித உரிமைச்செயற்பாட்டாளர்களைக் கொண்டு வழக்கின் விசாரணைகளை முழுமையாக அவதானிக்க வேண்டும். அனைத்து விசாரணைகளும் ஒரு மாத காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்டு விரைவாகக் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும். பாதிக்கப்பட்ட இரு குடும்பங்களுக்கும் அரசால் வழங்கப்படும் இழப்பீடுகள் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கானதாக இருக்க வேண்டும் - என்றார் ரஜீவன். (த-5-ரி1)

## ஜனநாயக...

மாகாணம் முழுவதிலும் இன்று முழு அடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வெளிப்படுத்தும் உணர்வுபூர்வமான நடவடிக்கைக்கு நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம்.

மாணவர்களின் உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளன. அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மக்கள் - மாணவர்கள் போராட்டத்துக்கு உந்தப்பட்டுள்ளனர்.

30 ஆண்டு காலப் போரிலிருந்து, இராணுவப் போர்க் குற்றங்களிலிருந்து, மனித உரிமை மீறல்களிலிருந்து தமிழ் மக்கள் மீண்டெழும் நேரத்தில் துப்பாக்கிச் சூட்டு நடவடிக்கை நடந்துள்ளது. இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய செயல்கள் இனிமேல் இடம் பெறக் கூடாது. மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படும், முழு அடைப்புப் போராட்டம் அமைதியாக இன்று நடைபெற வேண்டும். வன்முறைக்கு இடமளியாமல் நடத்தப்படவேண்டும். மக்கள் - மாணவர்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும். பன்னாட்டுச் சமூகம் இதில் தலையிட்டு நீதியை நிலை நாட்டவேண்டும் - என்றுள்ளது. (த-5)

## சுலக்சனுக்கு...

பல்கலைக்கழக மாண வர்கள், பொது மக்கள், அரசி யல்வாதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம் சுன்னாகம் கந்தரோடை வீதி வழியாகச் சென்று காங்கேசன்துறை வீதியை அடைந்து அங்கிருந்து உடுவில் மயானத்தைச் சென்றடைந்தது. அங்கு பூதவுடல் மண்ணில் புதைக்கப்பட்டது.

இறுதி நிகழ்வையடுத்து பூதவுடல் கொண்டு செல்லும் வீதிகளில் சீருடையில் பொலிஸார் எவரையும் காணாதபோதிலும் சிவில் உடையில் பொலிஸார் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான பொலிஸார் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் கலகம் அடக்கும் பொலிஸாரும் அடங்கியிருந்தனர். (த-4-101)

## உத்தரவை...

பொலிஸ் உத்தரவை மீறிப் பயணம் செய்த காரணத்துக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்படமுடியாது. இந் தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தினால் நாட்டு மக்களுக்கு என்ன நேரும். இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சம்பவத்துடன்தொடர்புடையவர்களுக்குஎதிராக ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சம்பவம் பற்றி அறிந்து கொண்டபோது நானும் ஜனாதிபதியும் திருகோணமலையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்தோம். இந்தச் சம்பவம் பற்றி சிறப்பு விசாரணைகளை நடத்த அப்போதே ஜனாதிபதி தீர்மானித்தார்.

மாணவர்கள் பொலிஸ் உத்தரவை மீறிச் சென்றதனால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படுகின்றது. மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கலாம் - என்றார். (த-5)

## யாழ்.துப்பாக்கிச்...

அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். யாழ். இளைஞர்கள் இருவரின் உயிரிழப்பை அரசின் கணக்கில் பாரமாக்கப்படக் கூடாது. தென் பகுதியிலும் இதுபோன்ற சம்பவங்கள் பொலிஸாரினால் இடம்பெற்றுள்ளன. நல்லிணக்கம் எனும் போர்வையில் இதனை அரசு அள்ளிக் கொள்ளாமல் இருப்பது சிறந்தது. இது தொடர்பில் அரசு அவதானமாக இருக்கவேண்டும் - என்றார். (த-5)

## வடக்கில்

கோரிக்கை விடுத்துள்ளன. வன்முறையை விடுத்து, ஜனநாயக மரபுகளை மதித்து இன்றைய முழு அடைப்புப் போராட்டத்தை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளன. இன்று நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புக்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மரண அறிவித்தல்

## காசிநாதன் சயந்தன்

(ஆசிரியர், அச்சுவேலி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், பத்தமேனி)



கரந்தனைப் பிறப்பிடமாகவும் வைத்தியசாலை ஒழுங்கை, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் சயந்தன் நேற்று (24.10.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காசிநாதன் (ஓய்வு பெற்ற பொது சுகாதார பரிசோதகர்) - கமலேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் அனித்தா (ஜேர்மனி), சிந்துஜா (பழைய மாணவி - இராமநாதன் நுண்கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-2014) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமால் (ஜேர்மனி), சுதாகர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனிஸ்ரிகன் (ஜேர்மனி), கஜானன் (ஜேர்மனி), அஷ்மிலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 06,
டிஸ்பென்சரி வீதி,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 2054516, 076 6399015.

(J 5651) (16,17,19)

# மரண அறிவித்தல்

திருமதி

## மகாலட்சுமி பொன்னம்பலம்



தோற்றம்
18.01.1937

மறைவு
20.10.2016

யாழ்.கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம் கடந்த (20.10.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம் பலத்தின் அன்பு மனைவியும் சுதேசபாலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (கனடா), விஜயலட்சுமி (இலங்கை), தேவமலர் (கனடா), பாலகுமாரன் (பிரான்ஸ்), சுகந்தினி (கனடா), அருள்தேவி (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகா (பிரான்ஸ்), மஞ்சுளா (கனடா), சோதிராஜா (இலங்கை), பிறேம் (கனடா), சிவதர்ஷினி (பிரான்ஸ்), மோகனச்சந்திரன் (கனடா), இரவீந்திரன் (கனடா), விஜியந்தி(கனடா) ஆகியோரின் மாமியும் இராணிமலர், தவராஜா(இலங்கை), கனகாம்பிகை (கனடா), மகேந்திரராஜா (டென்மார்க்), மல்லிகாதேவி (கனடா), மன்மதராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகம்மா, காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம், பவளம், தங்கச்சி யம்மா, குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மைதிலி, மிதிலன், கிருஷாந் (பிரான்ஸ்), சுருதி, கோகுல் (கனடா), அருந்ததி, மாலதி, சகிலா, திபாசினி (இலங்கை), பபிஷா, கவிஷா, லெனிஷா (பிரான்ஸ்), சாங்கீர்தன், லக்ஷனா (கனடா), ரணுஜன், வர்ணஜா (கனடா), ஆர்யன், ஆதன், மகாலட்சுமி (கனடா), சுதாகரன் (இலங்கை), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்திற்கு (கோண்டாவில் வடக்கு அன்னுங்கை) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோகுல வீதி.

தகவல்:
குடும்பத்தினர்
021 2054661

(J 5647) (16,17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் நடவடிக்கையால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம். சம்பவத்தில் சாவடைந்த இரண்டு மாணவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு யாழ். மாவட்டத்தின் 28 அரச சார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்த அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்தது.

அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது:

அப்பாவி மாணவர்கள் இருவர் பொலிஸார் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படும் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழுந்தமை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. மர்மம் நிறைந்ததான இந்த இரண்டு மாணவர்களின் சாவு 'வேலியே பயிரை மேய்வதான கதையாகத் தொடர்கிறது' சம்பவம் தொடர்பான தெளிவான தகவல்கள் பெறமுடியாமல் மறைக்கப்படுவதான நிலமை மேலும் அச்சத்தை உருவாக்குகின்றது.

ஒரு சம்பவம் தொடர்பாக நல்லாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் வெளிப்படைத்தன்மையோடு இருப்பது நல்லிணக்கத்துக்கு முக்கியம். சட்டம், ஒழுங்கைப் பேணிப்பாதுகாத்து நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளைக் கொண்டிருக்காமல் அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாக நடந்து கொள்வதென்பது தவறான அணுகுமுறை. சிவில் சமூக அமைப் பினரான நாங்கள் நியாயமான மக்கள் போராட்டத்துக்கு எமது தார்மீக ஆதரவை வழங்குவதோடு சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தும் இதற்கு ஆதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். நியாயம் கோரிய மக்கள் போராட்டங்கள் தவறாக வழிநடத்தப்பட்டுதிசை திருப்புவதற்கும் வாய்புக்கள் உள்ளன. இந்த நிலமையில் நியாமான போராட்டங்கள் நிதானமாக நடைபெறுவதையும் சிவில் சமூக அமைப்புக்கள் உறுதிப் படுத்த வேண்டும் என்பதையும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் -என்றுள்ளது. (ந-4)

# வீடு நிர்மாணம் பூர்த்தியாகியும் இறுதிக் கொடுப்பனவு இல்லை

## பாதிக்கப்பட்ட பயனாளிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 25
மீள்குடியேற்ற அமைச்சின் வீடமைப்புத் திட்ட வேலைகள் பூர்த்திசெய்தும் இறுதிக்கொடுப்பனவு பெறமுடியாமல் அலுவலகங்களுக்கு அலைய வேண்டியுள்ளது என்று பாதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்களால் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு செப்ரம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் வீடுகளைக் கட்டி முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி வீடுகளை அமைத்தபோதும் இறுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

குடியிருப்பாளர் தமது காணியில் கட்டடம் அமைப்பதாயின் சபையின் அனுமதி பெற்ற பின்னரே கட்டடம் அமைக்க வேண்டும். கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதை வீட்டின் உரிமையாளர் முறைப்படி விண்ணப்பிக்கும் பட்சத்தில் சபையின் தொழில்நுட்ப அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர், வருமான பரிசோதகர்பார்வையிட்டுஅறிக்கை வழங்கிய பின்னரே அமைவுச் சான்றிழ் வழங்க முடியும்.

வீடமைப்புத் திட்டத்தின் அவசியம் கருதி பிரதேச செயலகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் கட்டட அனுமதி வழங்கப்படாத நிலையில் அனைவரும் வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். சபையின் அதிகாரிகள் கட்டட விண்ணப்பித்துக்குரிய அனுமதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். கட்டட அனுமதிப் பத்திரம் இன்னும் வழங்கப்படாத கட்டடத்துக்கு வேலைகள் முடிவடைந்துள்ளன என்ற சான்றிதழ் வழங்குவது எவ்வாறு சாத்தியமாகும்?. வீடமைப்புத் திட்டத்தின் அவசியம் கருதி சபையின் நடவடிக்கையில் சில தளர்வுகளை ஏற்படுத்தியதை சந்தர்ப்பமாகக் கருதி சிலர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமல் உள்ளனர். அதனால் கட்டட விண்ணப்பங்களை அனுமதிக்க முடியாத நிலை காணப்படுகிறது..

மாநகர சபை, நகரசபைகளைப் பொறுத்த வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அந்த அதிகாரிகளும் கட்டட விண்ணப்பப் படிவத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின்னரே அனுமதி வழங்குவார்கள். அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இறுதிக் கொடுப்பனவு பெறுவதில் குடியிருப்பாளர்கள் அக்கறையுடன் முனைகின்றனர் -என்று உள்ளூராட்சிசபையினர் தெரிவித்தனர்.

பயனாளிகளின் நலன் கருதி இறுதிக் கட்டக் கொடுப்பனவாக வழங்க வேண்டிய தொகையில் 50 ஆயிரம் ரூபாவை பிடிபணமாக வைத்துக்கொண்டு மிகுதித் தொகையை நான்காம் கட்டக் கொடுப்பனவாக வழங்கவும் உள்ளூராட்சி சபையால் வழங்கப்படும் வீட்டு வேலைகள் பூர்த்தியடைந்தமைக்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பிடிபணமாக வைத்துள்ள தொகையை பயனாளிகளுக்கு கையளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் 96 சதவீதமான வீடமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன - என்று தென்மராட்சிப் பிரதேச செயலகம் தெரிவித்தது. (ந-4,9)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் அணைப்பில் 08.12.1933
ஆண்டவன் அழைப்பில் 25.10.2015

அமரர் **றொசாறியோ வயலற் அந்தோனிப்பிள்ளை**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
யோவான் 11 : 25

அருகிருந்து அரவணைத்து அன்பு செய்தீர் எம்மை
ஆறுதலும் தந்தெமக்கு ஆதரவாய் நின்றீர்
மேதினியில் சிறப்புடனே நாமும் வாழ - உம்மை
மெழுகாக உருக்கி நீரும் வாழ்வு தந்தீர்
மேன்மை கொள் இறையவனின் சந்நிதியில்
மேலான நிறை அமைதி கொண்டிடுவீர்

*என்றும் உங்கள் நினைவில்*
**குடும்பத்தினர்.**
பத்திமா கோயிலடி, பண்டத்தரிப்பு.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 04 . 1946



மறைவு 29 . 10 . 2013

அமரர் Dr. **வல்லிபுரம் பத்மநாதன்**
*திதி - 25.10.2016*

அன்பினால் உறவணைத்தாய் அமைதியாய் வாழ்ந்திருந்தாய்
பண்பிலே உயர்ந்த பெரியோனே !
பலர் பிணி போக்கியதால்
பாரெல்லாம் உனைப் போற்றுதல் கண்டோம்
உற்றவராய் உம் மடியில் நாமிருந்த வேளையில்
கூட்டதில்லை எம் வாழ்வு ! அன்புடைப் பெரியோனே !
கூட்டுறவாளா ! கோடுகிழித்து வாழ்ந்தனையே !
நாலுதிக்கிலும் நல்லவர் சேர்த்தாய்
வல்லோராய் எமைச் செதுக்கி விட்டாய்
வாழ்ந்து பார்த்து நிறைவு கொண்டாய்
ஆழ்ந்த துயிலில் அடங்கி ஆண்டுகள் மூன்று சென்றதப்பா !
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கண்ணகி ஹாட்வெயார்,
வள்ளுவர்புரம், முல்லைத்தீவு.
(J 5632)
(14,17,18)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*அமரர்* **கபிரியேல் அருளானந்தம்**



அன்னை மடியில் 06.11.1940
ஆண்டவன் அடியில் 23.09.2016

நாள்கள் முப்பத்தொன்று
சென்றிடினும்
மறைந்திடுமோ உங்கள் நினைவு
பரிதவிக்குதையா எம் நெஞ்சம்
உம் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

115, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி நிமாலினி வீரசிங்கம்**
(பாப்பா)
அன்னை மடியில் 11.04.1972
ஆண்டவன் அணைப்பில் 25.10.1984

எங்கள் அன்பு மகளே உன்னை நினைத்து
மனம் உருகுதம்மா உள்ளம் வெடித்து வெடித்து
தினம் அழுததம்மா உன்னோடு வாழ்ந்த சிலகாலம்
உயிர் உள்ளவரை போகும் துயரைத்தந்து
உன்னை ஏன் பறித்தான் அந்த ஆண்டவன்
ஆசை மகளே உன்னை நினைத்து ஆசைகளை
வளர்த்தோம் அத்தனையும் கனவாகிப் போனதம்மா
கனவுகள் கலைந்து போகலாம் எங்கள் உயிர்
உள்ளவரை உன் நினைவுகள் அழியாதம்மா.

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
அன்பு அப்பா - அம்மா
தம்பிமார், தங்கைமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் முற்றிலும்
நவீனமயப்படுத்தப்பட்ட
விசாலமான காட்சியறையை

# ROYAL Collection



இல. 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின்புறமாக)

ஆண்கள் / பெண்களுக்கான
ஆடைத்தினுசுகள் மற்றும்
அழகு சாதனப்பொருள்கள்






தீபத்திருநாளை
முன்னிட்டு விசேட விலைக்
கழிவுகள் வழங்கப்படும்.

**ROYAL COLLECTION**
NO.223, POWER HOUSE ROAD
(Behind Jaffna Teaching Hospital) T.P : 021 2225573

---

Mangala

அனைத்துத் தளபாடங்களுக்கும் விசேட விலைக் கழிவு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே...! தெரிவுக்கு முந்துங்கள்!

## தீபாவளியை முன்னிட்டு
## வாடிக்கையாளருக்கு மாபெரும் போனஸ்



~~39000/=~~ 32500/=
~~1500/=~~ 990/=
~~11500/=~~ 8750/=
~~2500/=~~ 1850/=
6 கதிரைகளுக்கு
ரீபோ இலவசம்
~~4800/=~~ 4000/=
~~2000/=~~ 1450/=

## மங்களா காட்சியறை

இல.536, K.K.S வீதி, மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 8367, 0777 286069

---

SK

# சிறிகுமரன் ரெக்ஸ்

தித்திக்கும் தீபாவளியை " சிறிகுமரன் ரெக்ஸ் " உடன்
கொண்டாடி மகிழுங்கள்



Office wear
சாறி ரூபா 590/= இலிருந்து
(With Blouse)


இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி, சல்வார் மற்றும்
ஆடைத் தெரிவுகளை அதிரடி விலைகளில்
பெற்றிட.

இச்சலுகை 19.10.2016 - 29.10.2016
வரை மட்டுமே.

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

---

சொவ்ட்லொஜிக்கின் தீபாவளி சிறப்புத் தள்ளுபடிகள்.



30% வரை தள்ளுபடிகள்
இலகு தவணை திட்டம்
விசேட சலுகைகள்
வட்டியின்றி செலுத்தும் முறை.

softlogic




| Puthukkudiyiruppu | Thirunelvely | Nelliady |
|---|---|---|
| 021 206 1571<br>077 505 7870 | 021 567 1118<br>077 834 7733 | 021 567 2148<br>077 372 5604 |
| Jaffna | Chunnakam | Softlogic max |
| 021 567 1108<br>077 799 1283 | 021 567 2148<br>077 892 8168 | 021 ...<br>077 739 7734 |

Panasonic SAMSUNG Candy NOKIA xerox Midea lifeStyles

---


வருட இறுதியை சந்தோஷமாக கொண்டாட, அனுபவிக்க...

## மலேசியன் சுற்றுலா
## ஹோட்டல் பெக்கேஜ்

**யாழ் மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

மலேசியாவை பார்வையிடுவதற்காகவே மிக மிகக் குறைந்த விலையில்
சிறந்த Hotel Package அறிமுகப்படுத்தப்படுகிறது.

**மலேசியா தலை நகரில் 3 Star Hotel**



- 3 இரவுகள் 4பகல்
- காலை உணவு அமெரிக்கன் Style
- விமான நிலையத்திலிருந்து Hotel வரை இரு வழிப் பயண வசதிகள் உட்பட

Hotel Package **7499/=** மாத்திரமே.

விமான Ticket+Visa வசதிகளும் செய்து தரப்படும்.
" நீங்கள் பதிவு செய்யும் நேரத்தில் Ticket+Visa
கட்டணம் அறவிடப்படும்"

Note: சந்தைப்படுத்தல் (ஆண் /பெண்)மற்றும் காசாளர் (பெண்)
ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**SHARMILA TRAVELS & TOURS**
No.289, Stanley Road, Jaffna.
மேலதிக தகவல்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்.
T.P No: 021 222 0266/ 021 222 0267
pettah@sharmilatravels.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூர் ரென்னிஸ் கெர்பர் முன்னேற்றம்

சிங்கப்பூர் ரென்னிஸ் தொடரில், நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றி பெற்று அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகரித் தார் ஏஞ்சலிக் கெர்பர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு வீராங் கனைகளுக்கு மட்டுமாக நடத்தப்படும் இந்தத் தொடரே நடப்பு வருடத்தின் இறுதித் தொடராகும். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான கெர்பரை எதிர்த்து சிபுல் கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண் டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் கெர்பர். இரண் டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் கைப்பற்றினார் சிபுல்கோவா. முதல் இரு செற்களின் முடிவில் இருவரும் தலா ஒவ் வொரு செற்களில் வெற்றிபெற்றிருந்தமையால் மூன்றாவது செற்ளைக் கைப்பற்றுபவரே வெற்றி யாளர் என்ற நிலை இருந்தது. அந்த செற்றை 6:3 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற் றினார் கெர்பர். முடிவில் அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குச் செல் வதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தினார். (ம)





## மூன்று பந்துப் பரிமாற்றங்களில் முடிந்தது பங்களாதேஷின் கதை

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இங்கிலாந்து. ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று மேலதிகமாக மூன்று பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் பங்களாதேஷின் ஆட்டம் முடிவு கண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்து, 293 ஓட்டங்களில் சகல இலக்குக ளையும் இழந்தது. அதிகபட்சமாக மொயின் அலி 68 ஓட்டங்களையும், பரிஸ்ரெளவ் 52 ஓட்டங்களையும், ரூட் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மிராஸ் 6 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், இஸ்லாம் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 248 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக இக்பால் 78 ஓட்டங்களையும், ரகிம் 48 ஓட்டங்களையும், முகமதுல்லா 38 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்துவீச்சில் இங்கிலாந்தின் சார்பாக ஸ்ரொக்ஸ் 4 இலக்குகளையும், மொயின் அலி 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

45 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண் டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கி லாந்து 240 ஓட்டங்களில் சகல இலக்கு களையும் இழந்தது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 85 ஓட்டங்களையும், பரிஸ் ரெளவ் 47 ஓட்டங்களையும், வோக்ஸ் ஆட்ட மிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக சகிப் அல் ஹசன் 5 இலக்குகளையும், இஸ்லாம் இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பங்களாதேஷுக்கு இலக்காக 286 ஓட் டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நான்காம் நாள் நிறைவில் அந்த அணி 253-8 என்ற நிலையில் இரந்தது. பங்களாதேஷின் வெற் றிக்கு இன்னும் 33 ஓட்டங்களும், இங்கி லாந்தின் வெற்றிக்கு இன்னும் 2 இலக்கு களும் தேவை என்ற நிலையில் நேற்றைய இறுதி நாள் ஆரம்பமானது. ரகுமான் 59 ஓட்டங்களுடனும், தயுல் இஸ்லாம் 11 ஓட்டங் களுடனும் களமிறங்கினார்கள். அதே ஓட்ட எண்ணிக்கையில் தயுல் இஸ்லாமை வீழ்த்தினார் ஸ்ரோக்ஸ். அவரைப் பிரதியீடு செய்த சபியுல் இஸ்லா மும் அதே பந்துப் பரிமாற்றத்தில் ஆட்டமிழக்க முடிவில், 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இங்கி லாந்து.


இறுதிநாளான நேற்றையதினம் வெறும் 3.3 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலை யில் இங்கிலாந்தின் வெற்றி உறுதியா னது. (ம)

## மிராஸின் உத்வேகம்

இந்திய அணியின் முன் னாள் சுழல்பந்து வீச்சாள ரான ரமேஸ் பவார்தான் எனக்கு உத்வேகம் தந்தவர் எனத் தெரிவித் தார் பங்களாதேஷின் சுழல்பந்து வீச்சாளரான மிராஸ்.

இங்கிலாந்து, பங்களா தேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் நேற்று முடிவுக்கு வந்தது. 22 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற் றது. அந்த அணி தனது முதல் இன்னிங்ஸில் 293 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந் தது. பங்களாதேஷின் அறிமுக வீரரான மிராஸ் 6 இலக்குகளைக் கைப் பற்றினார். இதனைய டுத்து நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே மிராஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நான் ரமேஸ் பவாரை சந் தித்ததே இல்லை என் றாலும், அவர்தான் என் னுடைய ஹீரோ. அவர் விளையாடிய ஆட்டங் களை தொலைக்காட்சி யில் பார்த்துள்ளேன். அவரது ஆட்டத்தைப் பார்த்து உத்வேகம் அடைந்தேன் என மிராஸ் மேலும் தெரிவித்தார். (ம)



## லெய்செஸ்டர் அபார வெற்றி

இங்கிலாந்து கால்பந்தாட் டக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் பிறீ மியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் லெய்செஸ்டர் சிற்றி அபார வெற்றிபெற்றது.

லெய்செஸ்டர் சிற்றி, கிறிஸ்டல் பலஸ் ஆகிய அணிகளுக்கு இடையி லேயே ஆட்டம் இடம்பெற் றது. 3:1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றது. லெய்செஸ்டர் சிற்றியின் சார்பாக, மூஸா, ஒகஸாகி, கிறிஸ்ரியன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்தனர். (ம)

## சிம்பாப்வேக்கு எதிராக தலைவரானார் கேரத்

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு தலைவராக நியமிக் கப்பட்டார் ரங்கன கேரத்.

இலங்கை- சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் இரு ஆட்டங் களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 29ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நவம்பர் மாதம் 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. காயம்காரணமாகக்குறித்ததொடரில்மத்தியூஸ்களமிறங்குவதைத் தவிர்க்கும்படி மருத்துவக் குழு அறிவுறுத்தியது. அவ்வாறு கள மிறங்கினாலும் பந்துவீச வேண்டாம் என்று தெரிவித்தது. இத னால் இந்தத் தொடரில் மத்தியூஸின் பங்குபற்றல் சிக்கலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இலங்கை அணியின் தலைவராக கேரத் நியமிக்கப்பட்டார். (ம)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி 9000

பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில், தனது 9 ஆயிரம் ஓட்டத்தை நிறைவு செய்தார் இந்திய அணியின் தலைவரான டோனி.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 285 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. 286 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி, 41 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது. எவரும் எதிர்பார்க்காத வகையில் டோனி நான்காவது வீரராக களம் இறங்கினார். தொடக்க முதலே அதிரடியாக விளையாடத் தொடங்கினார். அவர் 22 ஓட்டங்களைச் சேர்த்த பொழுது ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 9 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டினார். 9 ஆயிரமாவது ஓட்டத்தை சிக்சர் மூலமே டோனி கடந்தார். (ம)





# பொதுநலவாயப் போட்டியிலும் சாதித்துக் காட்டினார் ஆசிகா

யாழ்ப்பாணம், ஒக். 25

80 நாடுகள் பங்குபற்றிய கனிஷ்ட பிரிவினருக்கான பொதுநலவாய பளுதூக்கும் போட்டியில், வெண்கலப் பதக்கம் வென்று இலங்கைக்குப் பெருமை சேர்த்தார் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையின் வீராங்கனையான வி.ஆசிகா.

மலேசியாவில் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் பிரிவு பளுதூக்கும் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. 58 கிலோ எடைப் பிரிவில் களமிறங்கிய ஆசிகா, ஒட்டுமொத்தமாக 139 கிலோ பளுவைத் தூக்கியே வெண்கலம் வென்றார்.

இதைவிட நடப்பு வருடத்தில் மட்டும் ஆசிகா மூன்று தேசியப் பதக்கங்களைக் கைப்பற்றியிருந்தார். தேசியமட்டப் போட்டியில் 135 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டியில் 141 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், பாடசாலைகள் சம்மேளனத்தின் தேசியமட்டப் போட்டியில் 151 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றியதுடன், சிறந்த பளுதூக்கல் வீராங்கனை என்ற அடைவையும் ஏற்படுத்தியிருந்தார். அத்தனை தேசியமட்டப் போட்டிகளிலும் சாதித்த ஆசிகா, தற்போது பொதுநலவாயப் போட்டியிலும் தனது ஆதிக்கத்தை வலுவாகவே நிலை நாட்டியுள்ளார். இவர் கடந்த வருடமும் பொதுநலவாயப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)

# ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டார் நடால்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டார் ஸ்பெயினின் நட்சத்திர வீரரான நடால்.

12 ஆயிரத்து 900 புள்ளிகளுடன் சேர்பிய வீரர் ஜோகோவிக் முதலிடத்தில் உள்ளார். 10 ஆயிரத்து 485 புள்ளிகளுடன் பிரிட்டன் வீரர் முர்ரே இரண்டாவது இடத்தில் உள்ளார். 5 ஆயிரத்து 820 புள்ளிகளுடன் சுவிற்சர்லாந்தின் வாவ்ரிங்கா மூன்றாவது இடத்தில் உள்ளார். கனடா வீரர் மோசஸ் ரொனிக் 4 ஆயிரத்து 690 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார். ஐந்தாவது இடத்திலிருந்த நடாலை நிசிகோரி பிரதியீடு செய்தார். நடால் ஆறாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். இதன்படி நிசிகோரி 4 ஆயிரத்து 650 புள்ளிகளும், நடால் 4 ஆயிரத்து 380 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

ஏழு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே மொன்பில்ஸ், பெடரர், பெர்டிச் டொமினிக் ஆகியோர் உள்ளனர். (ம)

# இங்கிலாந்து பிறீமியர் லீக்: போராடி வென்றது லிவர்பூர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் பிறீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லிவர்பூல் வெற்றிபெற்றது. லிவர்பூலை எதிர்த்து வெஸ்ட் அல்பியன் அணி மோதியது. ஆட்டத்தின் 33 ஆவது நிமிடத்தில் ரொபேர்ட்டோ பெர்மின்கோவிடமிருந்து பந்தைப் பெற்ற சாடியோ மனே முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்று லிவர்பூலின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் அல்பியன் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் 68ஆவது நிமிடத்தில் பிலிப்பே லிவர்பூலின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். நீண்டநேர முயற்சிக்குப் பின்னர் ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் வெஸ்ட் அல்பியன் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது லிவர்பூல். இந்த வெற்றியின் மூலம் லிவர்பூல் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. அல்பியன் அணியால் பதிவுசெய்யப்பட்ட கோலை லிவர்பூலின் கோல் காப்பாளர் தடுத்திருந்தால் லிவர்பூல் முதலிடத்துக்கு முன்னேறியிருக்கலாம். (ம)



# சங்காவைப் பின்தள்ளினார் கோக்லி சனத், பொண்டிங்குக்கும் பேராபத்து



பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் அதிக சதங்களைப் பதிவுசெய்தவர்கள் வரிசையில் சங்காவைப் பின்தள்ளினார் கோக்லி. இந்தியா– நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், இந்தியா வெற்றி பெற்றது. கோக்லி 152 ஓட்டங்களைக் குவித்தார். பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் அரங்கில், கோக்லியின் 26 ஆவது சதமாக இந்தச் சதம் பதிவானது. இதன்மூலம் அதிக சதங்களைப் பதிவுசெய்தவர்கள் வரிசையில் கோக்லி நான்காவது இடத்துக்கு முன்னேறினார். 25 சதங்களுடன் இருந்த சங்காவையே அவர் பின்தள்ளினார். 49 சதங்களுடன் சச்சின் முதலிடத்திலும், 30 சதங்களுடன் பொண்டிங் இரண்டாவது இடத்திலும், 28 சதங்களுடன் சனத் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். இன்னும் நான்கு சதங்களைப் பதிவுசெய்யும் பட்சத்தில் குறித்த பட்டியலில் கோக்லி இரண்டாவது இடத்துக்கு முன்னேறலாம். சங்கா 404 ஆட்டங்களில் பெற்ற 25 சதங்களையே கோக்லி தனது 174 ஆவது ஆட்டத்தில் முறியடித்தார்.

ஏழு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வில்லியர்ஸ், அம்லா, டில்சான், கங்குலி, கெய்ல் ஆகியோர் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடப்பு வருடத்துக்கான மைலோ கிண்ணத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான செய்தியாளர் சந்திப்பு கிறீன்கிராஸ் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. தொடருக்கான கிண்ணம் யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டது. (ம-23)

# ஜோன் காபற் தொடர்; ஹாட்லிக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 25
பாடசாலைகளுக்கு இடையிலான சேர். ஜோன் காபற் கனிஷ்ட பிரிவினருக்கான உயரம் பாய்தலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. எம்பிலிப்பிட்டிய பொது விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான உயரம் பாய்தல் நேற்று நடைபெற்றது. ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த மிதுன் ராஜ் 1.65 மீற்றர் உயரத்தக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.(ம-422-23)

## மாற்றமில்லை

நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதி இரண்டு ஒருநாள் ஆட்டங்களுக்குமான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து தற்போது ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் மூன்று ஆட்டங்களும் முடிவடைந்துள்ளன. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இந்திய அணி, இந்த மூன்று ஆட்டங்களுக்குமானதாகவே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் நான்காவது மற்றும் ஐந்தாவது ஆட்டங்களுக்கான அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ரெய்னா அணியிலிருந்து விலக்கப்பட்டார். வேறு எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை. காய்ச்சலில் இருந்து ரெய்னா முழுவதுமாக குணமடையவில்லை. எனவே அவருக்கு கூடுதல் ஓய்வு தேவை. இதனாலேயே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டார். அஸ்வின், ஜடேயாவைப் பொறுத்தமட்டில் அவர்கள் நீண்ட டெஸ்ட் தொடர்களில் விளையாடவுள்ளனர். இந்திய அணியின் பந்துவீச்சுப் பலமாக தற்போது அவர்களே உள்ளனர். எனவே டெஸ்ட் ஆட்டங்களைக் கருத்தில் கொண்டு ஒருநாள் ஆட்டங்களில் அவர்கள் இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டது எனத் தெரிவுக்குழு தெரிவித்தது. (ம)

# இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பாகிஸ்தான் பிடியில் தீவுகள்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றியின் விளிம்பில் உள்ளது பாகிஸ்தான்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 452 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக யுனிஸ் கான் 127 ஓட்டங்களையும், மிஸ்பா 96 ஓட்டங்களையும், சபிக் 68 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக கபிரியேல் 5 இலக்குகளையும், கோல்டர் 3 இலக்குகளையும், பிஸ்சூ, பிரீத்வைட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் 224 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பிராவோ 43 ஓட்டங்களையும், கோல்டர் 31 ஓட்டங்களையும், சாமுவேல்ஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பில் சாஜ் 4 இலக்குகளையும், ரகற் அலி 3 இலக்குகளையும், சொகைல் கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
228 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான், இரு இலக்குகள் இழப்புக்கு 227 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக ரகட் அலி 79 ஓட்டங்களையும், சபிக் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும், அஸ்லாம் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.
தீவுகளுக்கு இலக்காக 456 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய நான்காம் நாள் முடிவில் அந்த அணி 171-4 என்ற நிலையில் உள்ளது. பிளக்வூட் 41 ஓட்டங்களுடனும் சேஸ் 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தில் இறுதிநாளான இன்று பாகிஸ்தானின் வெற்றிக்கு ஆறு இலக்குகளும், தீவுகளின் வெற்றிக்கு 285 ஓட்டங்களும் தேவைப்படுகின்றன. (ம)

## சிமோனா கேலப் அசத்தல் ஆட்டம்

சிங்கப்பூர் ரெனிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மேடிசன் கீஸை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகப்படுத்தினார் சிமோனா கேலப். (ம)

# யாழ். தெரிவு அணி கிண்ணம்வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 25
புனர்வாழ்வு பெற்றவர்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் விதமாக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் யாழ். தெரிவு அணி சம்பியனானது.
யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச தெரிவு அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச தெரிவு அணி மோதியது. இதில் யாழ். பிரதேச தெரிவு அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)

# ஹாட்லிக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 25
பாடசாலைகளுக்கு இடையிலான சேர். ஜோன் காபற் கனிஷ்ட பிரிவினருக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
எம்பிலிப்பிட்டிய பொது விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான தட்டெறிதல் நேற்று நடைபெற்றது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.நிதுசன் 36.14 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினார். ஹாட்லியின் பிறிதொரு வீரரான எஸ். மிதுன்ராஜ் 33.42 மீற்றர் தூரத்துக்கு எறிந்து ஐந்தாம் இடத்தையும் வர்ணவிருதையும் வென்றார். (ம-422)

# ஆவரங்கால் மத்தி., வளர்மதி சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஒக். 25
புத்தூர் சோமஸ்கந்தன் வி.கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்தி., புத்தூர் வளர்மதி அணிகள் சம்பியனாகின.
சோமஸ்கந்தன் வி.கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டம், குறித்த கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:23, 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.
'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில், புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது புத்தூர் வளர்மதி வி.கழகம். (ம-108-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.